சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக்
குழந்தைகளிலிருந்து
கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப்
பைகளைக் கொடுத்து
இனாம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 15 ஞாயிற்றுக்கிழமை (29 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 63

# அரசு - புலிகள் பேச்சு நிலை குறித்து விளக்க கதிர்காமர் அமெரிக்கா செல்கிறார்

## அமெரிக்க பத்திரிகையாளர் வருகை

வடமராட்சி, ஜன. 29

அமெரிக்க பத்திரிகையான ''வோல்ட் நியூஸ் லைன்'' என்னும் பத்திரிகையின் தாய்லாந்து செய்தியாளர் யான் கொனன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்த இவர் கப்பலில் பருத்தித்துறை வந்தடைந்தார். (இ-ஐ-173-4)

முச்சந்திமுரளி



தடை நீக்கத்துக்குப் பின் பொருள்களை விட செய்தியாளர்கள் தான் அதிகம் பாருங்கோ......!

## கிளின்ரன் நிர்வாகம் விரும்பியதாம்

கொழும்பு, ஜனவரி 29

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களின் தற்போதைய நிலையை விளக்குவதற்காக —

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாரம் அமெரிக்கா செல்லவுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களின் நிலைமையை — விவரத்தை — கிளின்ரன் நிர்வாகம் அறிய விரும்பியதாகவும் அதனைத் தொடர்ந்தே அமைச்சர் கதிர்காமர் அங்கு செல்கிறார் என்றும் அறியப்படுகிறது.

அமைச்சர் கதிர்காமர் இவ்வாரம் அமெரிக்காவுக்குப் பயணமாகிறார். அங்கு ஒரு வாரத்திற்குமேல் தங்கியிருப்பார். அமைச்சருடன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மூவரும் கூடச்செல்வர்.

சமாதான முயற்சிகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் —

இப்போதுள்ள முட்டுக்கட்டை நிலைமையையும் — அரசாங்கத்தின் உத்தேச

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு போர் நடத்த விரும்பினால் வெற்றி கொள்வது கடினம் அல்ல

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 29

விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லையானால் போருக்கு நான் செல்வேன் என்று கூறவில்லை ஆனால் நன்கு ஆயுதம் தரித்த ராணுவத்தைக் கொண்ட மன உறுதியையும் நேர்மையையும் உடைய அரசாங்கத்தினால் போரில் வெற்றி காண முடியும் என்பதை மட்டும் கூறி வைக்க விரும்புகிறேன்

பிரெஞ்சு தினசரியான 'லீ மொண்டி' க்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அளித்த பேட்டி கடந்த புதன் கிழமை வெளியானது.

அப்பேட்டியில் அவர் சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலவரம் தொடர்பான தனது மனக்கிடக்கையை வெளிப்படுத்தி உள்ளார் என கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று தெரிவிக்கிறது.

''லீ மொண்டி'' பிரெஞ்சு தினசரிக்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மூலம் அரசாங்கத்தை விட விடுதலைப் புலிகளே கூடுதலான அளவுக்கு சாதகமான பேரம் பேசல் பலத்தை பெற்றிருக்கிறார்கள்.

நடத்தப்பட்ட முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு இரு கப்பல்களில் உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் அரசாங்கம் அனுப்பி வைத்தது. அரசாங்கத்தின் இச்செயலுக்கு பிரதியுபகாரமாக விடுதலைப் புலிகள் 20 கைதிகளை மட்டும் விடுதலை செய்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்தைச் சுற்றி உள்ள ராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் காட்டும் இத்தகைய போக்கு எனக்கு நியாயமானதாகத் தெரியவில்லை.

சமாதான முயற்சிகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை நாம் அண்மிக்கும் போதே மோதல் தவிர்ப்பு போர் நிறுத்தமாக மாறும்

## 'இந்து' பத்திரிகைக்கு சந்திரிகா பேட்டி

கொழும்பு, ஜன. 29

போர் நிறுத்தம் என்பது நாம் சமாதானத்தை அண்மிக்கும் போது செய்ய வேண்டிய இறுதி விடயமாகும்.

— ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அண்மையில் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் போர் இடைநிறுத்த (மோதல் தவிர்ப்பு) ஏற்பாட்டைத் தொடர்ந்து போர் நிறுத்த இணக்கத்தை ஏற்படுத்தும் ஆவணம் ஏதும் பரிமாறப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்தப் பேட்டியின் சில பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

கேள்வி:- விடுதலைப் புலிகளுக்கும் உங்களுக்கும் நேரடி தொலைபேசித் தொடர்பு (ஹொட்லைன்) இருக்கிறதா?

சந்திரிகா:- இல்லை. அது உண்மையில்லை. ஆனால் இராணுவத்தின் ஊடாக நாம் அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கிறோம். அத்துடன் நாங்கள் வேறுபலபுதிய இயந்திரங்களை உபகரணங்களை நிர்மாணித்திருக்கிறோம். அவற்றின் மூலமாக அவர்களுடன் நாம் தொடர்பு கொள்ளமுடியும். ஆனால கொழும்பிலிருந்து அல்ல.

கேள்வி:- அரசியல் பேச்சுவார்த்தைகளில் இருந்து ஏனைய தமிழ்க் குழுக்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் கையாண்ட தந்திரோபாயங்களினால் இத் தமிழ்க் குழுக்கள் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளன. புலிகள் கிழக்கிலே ஆயுதங்களுடன் திரியும்போது ஏனைய தமிழ்க் குழுக்களின் பாதுகாப்பு எவ்வாறு இருக்கும்?

சந்திரிகா:- போர் இடைநிறுத்த ஏற்பாட்டின் காரணமாகதான் கிழக்குக்குப்புலிகள் செல்கிறார்கள் என்றில்லை. அவர்கள் ஏற்கனவே அங்கு இருக்கிறார்கள். இராணுவம் பரந்த அளவில் கட்டுப்பாட்டை கொண்டிருக்கிற அதேவேளை புலிகளும் தங்கள் இடங்களில் இருக்கிறார்கள்.

கேள்வி:- ஏனைய தமிழ்க் குழுக்களின் பங்கு என்ன, சமாதான முயற்சிகளில் அவர்களுக்கு ஏதாவது பங்கு இருக்குமா?

சந்திரிகா:- ஆம் அவர்கள் சமாதான முயற்சிகளில் மிகவும் முக்கியத்துவம வாய்ந்த பங்கை வகிக்க முடியும். இப்போதுகூட அவர்கள் சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கை ஆற்றி வருகிறார்கள் இக்குழுக்கள் ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்ற அரசியல் முறைமைக்குள்ளும் அவர்கள் பிரவேசித்துள்ளனர். அவர்களுடனும் தொடர்ச்சியாக நாம் பேச்சுவார்த்தைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் ஊடாக மோட்டார் சைக்கிள் பற்றறி

### படையினர் அனுமதிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 29

மோட்டார் வாகனங்களுக்கு பயன்படும் பற்றறிகளை தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாக வடபகுதிக்குள் எடுத்து வருவதற்கு தற்போது இராணுவத்தினர் அனுமதி வழங்கி உள்ளனர்.

அரசாங்கம் அனுமதி வழங்கிய பின்னரும் இத்தகைய பற்றறிகளை எடுத்துவர ஆரம்பத்தில் படையினர் அனுமதிக்கவில்லை. தமக்கு அறிவித்தல் வரவில்லை என படையினர் தெரிவித்தனர்.

தற்போது கடந்த வியாழன் முதல் தாண்டிக்குளம் ஊடாக மோட்டார் சைக்கிள் பற்றறிகளையும் எடுத்துவர படையினர் அனுமதிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## தடைநீக்கம் பெயரளவில் வடபகுதி மக்கள் அதிருப்தி

கொழும்பு, ஜன. 29

வடபகுதிக்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த 40 பொருள்கள் மீதான தடையை நீக்கிவிட்டதாக அரசு அறிவித்துள்ளபோதிலும்—

அப்பொருள்கள் போதிய அளவில் வந்து சேர்வதில்லை என குடாநாட்டு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர் என நேற்றைய வீரகேசரி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தடைநீக்கம் பெயரளவில் தானே தவிர செயலிலே எதுவும் கிடையாது என குடாநாட்டு மக்கள் விசனத்துடன் தெரிவித்துள்ளனர் — என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

## புலிகளின் உத்தரவுக்கு கட்டுப்படத் தேவையில்லை

### மட்டக்களப்பு பிரிகேடியர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

''மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் எவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலுக்கு கட்டுப்படத் தேவை இல்லை. தற்போது அமுலில் உள்ள போர் இடைநிறுத்த (மோதல் தவிர்ப்பு) உடன்பாட்டில் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் கிடையாது.''

மட்டக்களப்பு மாவட்ட ராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் பொன்சேகா இவ்வாறு தெரிவிக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில திணைக்களத் தலைவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களால் சில தலையீடுகள் மேற்கொள்ளப்படுவதாகப் புகார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வானொலியில் புலிகளுக்கு எதிராக பொய்ப் பிரசாரம்

### அரசின் செயல் குறித்து கண்டனம்

யாழ்ப்பாணம்' ஜன' 29

ஸ்ரீலங்கா அரசு புதிய வானொலி ஒலிபரப்புகளை ஆரம்பித்து அவற்றின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெரும் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

வடபகுதி தமிழ் மக்களுக்கு என விசேட வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் பொய்ப் பிரசாரம மேற் கொள்ளப்படுகிறது.

அரசுக்கும்' விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் — குறிப்பாக போர் இடைநிறுத்தம் அமுலான பின் இந்த விசேட வானொலிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மேற் கொள்ளும் இத்தகைய பொய்ப் பிரசார நடவடிக்கைகள் அரசின் சமாதான நடவடிக்கையில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

— இவ்வாறு புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது. (ஒ-ஐ)

## ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் கடத்தல்

கொழும்பு, ஜன. 29

மூதூர் பகுதியில் தமது உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ் வின் உறுப்பினரான [illegible] யுதம் வர்ணகுலசிங்கம் (வயது 23) என்பவர் ஆயுதம் தாங்கிய ஆறுபேரினால் கடத்தப்பட்டுள்ளார் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்ட அந்த இளைஞரின் நிலை குறித்தும் அவர் [illegible] குறித்தும் மன்னிப்புச் சபை அச்சம் தெரிவித்துள்ளது. (இ-ஐ-6)

## அரசு மீது மக்கள் சீற்றம்

### ராவய ஆசிரியர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.29

பெரும்பான்மை வாக்குகளால்ஆட்சியில் அமர்த்தப்பட்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு மீது பொது மக்கள் தற்போது சீற்றம் அடைந்திருப்பதாக 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்துள்ளார்

வெளிநாட்டு முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக்கொள்கையையே அரசு வெளியிட்டுள்ளது.

விவசாயிகள், தொழிலாளர், கடற்றொழிலாளர், சிறுஉற்பத்தியாளர்கள் அதில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசின் பாதையில் செல்லும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முயற்சி தோல்வியையே தழுவும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-ஐ-6)

# கிழக்கில் தொடர்ந்தும் படையினர் சோதனை

## தமிழ் குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

திருமலை மாவட்டத்தின் பல இடங்களிலும் படையினரின் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழனன்று பிற்பகல் 3 மணியளவில் கட்டைப் பறிச்சான் பகுதியில் இருந்து சல்லங்கார் என்ற இடத்துக்குச் சென்ற இராணுவத்தினர் கட்டைப்பறிச்சானைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் என்பவரை மிகமோசமாக தாக்கித் துன்புறுத்தியுள்ளனர் என்றும் —

ஈச்சிலம்பத்தை மகிந்தபுரம், பெரியபாலம், பாலத்தோப்பு, சம்பூர் ஆகிய இடங்களில் தமிழர்கள் படையினரால் சோதனைக்கு உட்படுத்தப் பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

# பாதைப் பிரச்சினையை வைத்து பேச்சைக் குழப்ப வேண்டாம்

## நவசமசமாஜக்கட்சி அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 29

யாழ். குடாநாட்டுக்கான பாதைத் திறப்பை ஒரு கௌரவ பிரச்சினையாக்கி அதன் மூலம் பேச்சுவார்த்தைகளைக் குழப்ப வேண்டாம் என நவசமசமாஜக் கட்சி அரசைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு நவசமசமாஜக் கட்சி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

[illegible]தப்பிட்டி-பூநகரி பாதையைத் திறப்பதையே விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். இதையே நவசமசமாஜக் கட்சியும் விரும்புகிறது.— இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-ஐ)

## துன்னாலை இளைஞர் தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலையுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த விஜயம் விமலேந்திரன் என்ற இளைஞனை பெப்ரவரி 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி சரோஜினி குசேலாவீரவர்த்தன கடந்த செவ்வாயன்று உத்தரவிட்டார்.

இதற்கிடையில் இந்த இளைஞரின் விடுதலை வேண்டி சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு மார்ச் 31 ஆம் திகதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி

**A\L 95 DAY CLASS**

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. வரதராஜன் |
| அளவையியல் | — திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | — திரு. சௌந்தி |
| வர்த்தகமும் நிதியும் | — திரு. வரதன் |
| தமிழ் | — திரு. காரை S. செங்கா |

**ஆரம்பம்: 30-01-95**

காலை 8 மணி

அனுமதிகள் முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
[C-322]



## என்னைத் தெரியுமா?

மருத்துவர்களே!
திருமணமானவர்களே!
நோயாளிகளே!

என் பெயர்
**HUMAN**

நான் ஜேர்மன் நாட்டிலிருந்து வருபவன்
உங்களுக்காக

எதிர் பாருங்கள்
சொல்கிறேன் .....,

(34874)



## திரைப்படப் பிரியர்களுக்கு ஓர் நல் விருந்து

கடற் புலிகளின் ஆதரவுடன்:
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டு கழகமும்
நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய
இன்னும் ஒரு நாடு தந்த
பொ. தாசனின்

★ **உயிர்ப்பூ** ★
(முழு நீள வண்ணப்படம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய
ச. யேசுதாசனின்

★ **செவ்வரத்தம் பூ** ★
(வண்ணக் குறும்படம்)

நெல்லியடி மகாத்மாவிலும்
சாவகச்சேரி தெய்வேந்திராவிலும்
தினசரி 6-30 காட்சிகளாகவும்
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 காட்சிகளாகவும்
காண்பிக்கப்படுகிறது.

(சி/178)



உ
சுபமங்கள சோபனம்

## நவாலியூர் நா. சச்சிதானந்தன் எழுதிய "கணபதியே வருவாய்"

## நூல் வெளியீடு

நவாலியூர் நா சச்சிதானந்தன் அவர்கள் எழுதிய "கணபதியே வருவாய்" என்னும் நூல் இன்று (29-01-95) மாலை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வெளியிடப்படுவதையொட்டியும், நூலாசிரியர் தனது அறுபதாவது அகவை நிறைவெய்தியதை யொட்டியும் எல்லாம் வல்ல ஸ்ரீமஹாகணபதிமூர்த்தியின் பூரண கடாட்சம் அவருக்குக் கிட்டுமாறு பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

இங்ஙனம்:
ச.சுவாமி ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்
கோண்டாவில்.

(34879)



## இன்றே முந்திக்கொள்ளுங்கள்

வாடிக்கையாளர்களே!

பத்திரிகை விளம்பரத்தின் படி மின்சாரம் கிடைப்பதற்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதால் உங்கள் வீட்டு மின்சார உபயோகப் பொருள்கள், ரி.வி. டெக் Audio Hits, Two in one sets. மின் உபயோகப் பொருள்கள் அனைத்தும் பல ஆண்டுகள் பாவிக்கப்படாமல் இருப்பதால் அவைகள் மின்சாரத்தில் இயங்க தயாராக உள்ளனவா என பரிசோதனை செய்து உத்தரவாதத்துடன் சேவிஸ் செய்து அவற்றில் உள்ள பிழைகளை குறைந்த செலவில் திருத்திப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே எம்மை நாடுங்கள்.

டில்கா
வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்
284, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி.
(வானவில் அருகில்)
யாழ்ப்பாணம்.

கிளை: கண்டி வீதி,
சாவகச்சேரி.

(சி/330)



யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
சர்வதேச றோட்டறியின்

## 90 ஆம் ஆண்டு நிறைவு தமிழ் ஆங்கிலப் பேச்சுப் போட்டி

சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக் கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்புகள்:**

தமிழ்

1. மற்றவர்களுக்காகவும் வாழ்வோம்
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. தமிழிலக்கியங்களில் ஏலவே பொதிந்துள்ள றோட்டறியின் நோக்கங்கள்

ஆங்கிலம்

1. Live, Let Live.
2. Unity is Strength
3. Need for International Friendship

**போட்டி விதிகள்:**

14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

கீழே காட்டப்பட்ட மாதிரியில் அமைக்கப்பட்ட விண்ணப்பத்தை தயாரித்து உரியவாறு பூர்த்திசெய்து தாம் பயிலும் பாடசாலையின் அதிபர் அல்லது உப அதிபரைக் கொண்டு உறுதிப் படுத்தி, கீழ்க்கண்ட முகவரிக்கு இம் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் "சர்வதேச றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி" / "Oratorical Contest for the 90th Anniversary of Rotary International" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பேச்சுக்கான நேரம் 5 முதல் 7 நிமிடங்களாகும்.

தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் தனித் தனியே முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்,

### மாதிரி விண்ணப்பப் படிவம்

சர்வதேச றோட்டறியின்
90ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி

முழுப் பெயர்: ........................................
பிறந்த திகதி: .................... பால்: ............
பாடசாலை: .................... தரம்: ............
வதிவிட முகவரி: ........................................
பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மொழி: ........................

........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**உறுதிப்படுத்துதல்:**

இவ்விண்ணப்பதாரியினால் மேலே தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி செய்கிறேன்.

........................ ........................
கையொப்பம் திகதி
அதிபர் / உப அதிபர்
........................
........................

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-420)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 15 — 02 — 1922

ஆண்டவன் அடியில்: 20 — 01 — 1993

**நாகலிங்கம் சுப்பிரமணியம்**
(உரிமையாளர், மணியம் கடை சூராவத்தை சுன்னாகம்)

திதி: 29–01–1995

"பாசமெனும் மழை வார்த்த கார்மேகமே
அறிவெனும் ஒளிதந்த அணையாவிளக்கே
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டதேன்"

நீங்கா நினைவுகளுடன் நினைவுகூரும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூராவத்தை
சுன்னாகம்.

[7880]

# காந்தி அடிகளுக்கு-சத்திய சோதனை திருவள்ளுவருக்கு- அகிம்சா தர்மம்

**முத்து விதானம்**

சத்தியத்துக்கும் அகிம்சைக்கும் இடையே முரண்பாடு காணும் நெருக்கடி நிலையும் வாழ்க்கையில் நேரக் கூடும்.

உதாரணமாக, ஒரு குழந்தையைச் சிலர் கொன்று அதனால் பெரும் லாபம் அடையப் பார்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

ஒருவனது பாதுகாப்பில் அக் குழந்தை இருக்கிறது.

அவன் பொய் சொல்லமாட்டான் என்பது அந்தக் கொலைத் திட்டக்காரர்களின் நம்பிக்கை.

இந்த நிலைமையில் அவன் உண்மையைச் சொல்லத் தான் வேண்டுமா?

அகிம்சா தர்மத்தை முன்னிட்டு ஒரு பொய் சொல்லி விடலாமா?

'பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்'

குறள் இவ்வாறு கூறுகின்றது.

இத்தகைய இக்கட்டான சந்தர்ப்பத்தில் பொய் கூறுவதற்கு திருக்குறள் இடம் கொடுக்கிறது.

வாய்மை என்றால் என்ன? திருவள்ளுவர் கூறுகின்றார்.

'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்'

திருவள்ளுவருக்கு அகிம்சா தர்ம இலட்சியம் சத்தியக் குறிக்கோளுக்கு உயிர்நிலையாக உள்ளது என்ற குறிக்கோளை இந்த இரண்டு குறட் பாக்களிலும் காண்கின்றோம்.

ஒரே வார்த்தையில் அறத்தின் உயிர் நிலையைக் குறிப்பிடச் சொன்னால் வள்ளுவர் அதைச் கொல்லாமை (அகிம்சை) என்பார். இரண்டாவதாகத் தான் பொய்யாமையைக்கூறுவார்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை, மற்று அதன் பின்சாரப் பொய்யாமை நன்று"

காந்தியடிகளோ ஒரே வார்த்தையில் தம் அறநெறியைச் "சத்தியாக்கிரகம்" என்றே குறிப்பிடுவார்.

காந்தியடிகளுக்கு சத்தியமே உயிர் நிலை; அதன் உயிர் நிலை அகிம்சை, பொய்மை ஒருபோதும் புரை தீர்ந்த நன்மை விளைப்பதில்லை.

காந்தி அடிகளுக்கும் ரஷ்யத் பேரறிஞரான டால்ஸ்டாய்க்கும் மேலே குறிப்பிட்ட குழந்தையின் உயிரைக்காப்பதற்கும் பொய் சொல்லக் கூடாது.

இதுவே காந்தி — டால்ஸ்டாய் சிந்தனையின் தனிப் பெரும் போக்கு.

காந்தி அடிகள் தம் வாழ்க்கையைச் சத்திய சோதனை என்று குறிப்பிடுகின்றார் அல்லவா?

வள்ளுவரின் வாழ்க்கையோ அகிம்சாதர்ம சோதனை ஆகும்.

(பி.ஸ்ரீ கட்டுரையிலிருந்து தொகுப்பு)

## புலிகளின் குரல் வானொலியில்

**29 — 01 — 1995**
**ஞாயிறு இரவு**

★ 8-01 — இசையரங்கம் இசைக்கலைமணி க. கண்ணதாசனின் தாளவாத்தியக் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தாயகப்பாடல்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**30 — 01 — 1995**
**திங்கள் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7 15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**ஞாயிறு மாலை**

★ 5-01 சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு

## கிராமிய பாசறை மாதாந்த நிகழ்ச்சி

கொழும்பு ஜன. 29

புத்தூர் — சிறுப்பிட்டி கிராமிய பாசறை மாதாந்த நிகழ்ச்சி கலைமதி சனசமூக நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமையும், நாளை திங்கட்கிழமையும் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்.

பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை விளையாட்டு நிகழ்வுகளும் பின்னர் கருத்துரைகள் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

(ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணுறவு; 11 — 12 — 1922

விண்ணுறவு; 30 — 12 — 1994

**அமரர் சீனியர் சண்முகநாதன்**
[ சிறாப்பர் ]
( வரியப்புலம், சுன்னாகம் )
(கச்சேரி, புகையிரத பகுதி, சுங்க இலாகா, வர்த்தகத் திணைக்களம்)

அன்னாரின் மரணத்தின் போது பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், ஈமைக்கிரியைகளுக்கு சமுகம் அளித்தோருக்கும், கடித மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், நன்று கூறுவதுடன் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

கிளுவானை லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[7878]

அந்தணகுல திலகம்
புங்குடுதீவு

## சிவஸ்ரீ ப. கணேசராஜக் குருக்கள்
அவர்களின்

## நினைவலையில் ஓராண்டு



தோற்றம்: 1938 – 08 – 26

மறைவு: 1994 – 02 – 09

சிவாகம நெறிதனை முறையாக கற்றுணர்ந்தே
சீர்மலிய கிரியாபாதம் மண்ணில் சிறந்திடவே
அவமாக பொழுதை கழியாமல் அரிய
பணியெல்லாம்
அவனிக்கு தந்துவிட்டு இறைபதம் சேர்ந்தீரே!

கலைப் பணியால் இறைவனையும் இறைவியையும்
கவரவைத்த உங்கள் அப்பா வாழ்ந்து
விலை மதிக்க முடியாத வித்தைகளை எங்களிடம்
தந்துவிட்டு
விரைவாக சிவனிடத்தில் சென்றுவிட்ட
சேதியென்ன சொல்லுமையா......?

இங்ஙனம்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
க. வாகீஸ்வரன்
[மகன்]

[சி-452]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராவ்வின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் அர்ஜுன் சிங்குக்கும் பிரதமர் நரசிம்மராவுக்கும் இடையிலான நீண்டகால உட்கட்சிப் போராட்டம் தற்போது அர்ஜுன்சிங்கின் வெளியேற்றத்தை அடுத்து முக்கிய திருப்பம் ஒன்றை அடைந்துள்ளது.

சோனியா காந்தியை மீண்டும் முழு அரயலுக்கு இது கொண்டுவரலாம் அல்லது நரசிம்மராவின் தலைமைக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்.

**உட்கட்சி போராட்டத்தின் உச்சக்கட்டம்**

நரசிம்மராவின் காங்கிரஸ் அரசாங்கத்தில் மனிதவள அபிவிருத்தி அமைச்சராக



அர்ஜுன் சிங்

இருந்த அர்ஜுன்சிங் கடந்த ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்திருந்தார்.

தற்போது அதாவது கடந்த செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் கட்சியிலிருந்து அர்ஜுன்சிங் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். காங்கிரஸ் கட்சிக்குள் நிலவிய உட்கட்சிப் போராட்டத்தின் உச்சக்கட்டமாக இது கருதப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் பிரதமர் நரசிம்மராவே அர்ஜுன்சிங்கை கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைத்துள்ளார்.

அர்ஜுன்சிங் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குறித்து காங்கிரஸ் கட்சியின் நால்வர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைக் கமிட்டி விசாரணை நடத்த உள்ளது. இதன் தலைவர் ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் விஜயபாஸ்கர ரெட்டி.

அர்ஜுன்சிங் காங்கிரஸ் கட்சிக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் நடந்துகொண்டதாக நரசிம்மராவ் குற்றஞ்சாட்டி வருகிறார்.

தம்மை விலக்க அதிகாரம் இல்லை என்கிறார் 64 வயதுடைய அர்ஜுன்சிங்—அத்துடன் இந்தியா முழுவதும் நரசிம்மராவுக்கு எதிரான பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

அர்ஜுன்சிங் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராகக் கருதப்பட்டு வந்தவர். ஹிந்திபேசும் இந்திய மாநிலங்களில் காங்கிரஸில் உள்ள செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளில் இவரும் ஒருவர்.

1991 தேர்தல் பிரசாரத்தின் போது ராஜீவ் காந்தி

## சோனியாவை அரசியலுக்கு இழுப்பதன் மூலமே காங்கிரஸை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்

கொலையுண்டதை அடுத்து எதிர்பாராதவிதத்தில் நரசிம்மராவை பிரதமர் பதவி வந்தடைந்தது.

அத்தேர்தலில் வட இந்திய மாநிலங்களைவிட தென்னிந்திய மாநிலங்களிலேயே காங்கிரஸ் கட்சி கூடிய ஆதரவைப் பெற்றிருந்தது.

நரசிம்மராவ் தென்னிந்திய மாநிலம் ஒன்றைச் சேர்ந்தவராக இருந்ததும்—

சிறுபான்மை அரசு ஒன்றை காங்கிரஸ் அமைக்க வேண்டி இருந்ததும்— பிரதமர் பதவி அவரைச் சென்றடையவாய்ப்பாக அமைந்தது.

**நிலைமை மாறி விட்டது**

ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது.

கடந்தமாதம் நடைபெற்ற ஆந்திரா, கர்நாடகம், கோவா, சிக்கிம் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்கு பெரும் தோல்வியைக் கொடுத்தன.

ராவ்வின் மாநிலமான ஆந்திராவிலேயே காங்கிரஸ் மிகவும் மோசமான அளவு மண் கௌவ்வியது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மஹாராஷ்டிரா, பீஹார், குஜராத் ஒரிஸா, அருணாச்சல் மாநிலங்களிலும் தேர்தல்கள் நடைபெற உள்ளன.

இத்தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வி காணுமானால் நரசிம்மராவின் தலைமைக்கு வரும் ஆபத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது போகலாம்,

காங்கிரஸுக்குள் அர்ஜுன் சிங்குக்கும் நரசிம்மராவுக்கும் இடையிலான தற்போதைய போட்டியில் மதில்

**வெளி உலகில்**

மேல் பூனையாக இருப்பவர்கள் நரசிம்மராவைக் கைவிட்டுச் செல்லலாம்.

**அர்ஜுன்சிங்கின் 7 பக்க அறிக்கை**

அர்ஜுன்சிங் கடந்த மாதம் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த சமயம் காங்கிரஸ் தலைமையை மிகவும் மோசமாகத் தாக்கி ஏழு பக்க அறிக்கை ஒன்றைவெளியிட்டிருந்தார்.

அவரின் குற்றச்சாட்டுக்களில் பிரதானமானவை ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணைகளை நரசிம்மராவ் அரசு சரியான முறையில் கையாளவில்லை என்பது தான்.

பம்பாய் பங்குச்சந்தை ஊழல், பலகோடி ரூபா பெறுமதியான சீனி இறக்குமதி ஊழல் ஆகியவை தொடர்பான விசாரணைகளில் நரசிம்மராவ் தவறிழைத்து—

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அயோத்தியில் பாபர் மசூதி (Babri Mosque) இடிக்கப்பட்ட சம்பவம்—

உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

ராஜீவ்காந்தி கொலை விசாரணையில் இடம்பெற்றுள்ள தவறுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள், ராஜீவ்காந்தியின் மனைவி சோனியா காந்தியின் அங்கீகாரத்துடனேயே அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகிறது.

10, ஜன்பத் வீதியில் உள்ள காந்தி குடும்பத்தின் வாசஸ்தலத்தில் வைத்தே அர்ஜுன்சிங் இந்த ஏழு பக்க அறிக்கையைத் தயாரித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

47 வயதான சோனியா காந்தியும் மகள் பிரியங்காவும் மகன் ராஹுலும் இங்கேயே வசித்து வருகின்றனர்.

சோனியாகாந்தியின் மிக நெருங்கிய சகாக்களில் அர்ஜுன்சிங்கும் ஒருவர்.

ராஜீவ் காந்தி நம்பிக்கை நிறுவனத்தின் தர்மகர்த்தாவும் அர்ஜுன்சிங்தான். அர்ஜுன்சிங் காங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது சோனியா காந்திக்



சோனியா காந்தி

கும் நரசிம்மராவுக்கும் இடையிலான இடைவெளியை மேலும் அதிகரிக்க வைத்துவிட்டது.

**சோனியாவின் செல்வாக்கு**

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பின் 48 வருட காலச் சரித்திரத்தில் 36 வருட காலம் நேரு குடும்பம் நாட்டின் தலைமைப் பதவியை வகித்திருக்கிறது.

ராஜீவ்காந்தியின் கொலைக்குப் பின்னர் நேரு குடும்பத்தின் அரசியல் ஆதிக்கத்தில் ஒரு பெரும் இடைவெளி ஏற்பட்டபோதிலும் ராஜீவின் மனைவி சோனியா காங்கிரஸ் கட்சிக்குள் இன்னும் ஒரு செல்வாக்குள்ள நபராகவே இருந்து வருகிறார்.

1991 ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின்னர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி சோனியா மீது நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டது. எனினும் சோனியா அடியோடு அதனை ஏற்க மறுத்திருந்தார்.

எனினும் சோனியாவின் சமீபத்திய நடவடிக்கைகள் அவர் மீண்டும் முழுநேர அரசியலுக்குள் பிரவேசிக்கலாம் என்ற ஊகங்களை ஏற்படுத்தி உள்ளன.

சோனியா சமீபத்தில் தெரிவித்திருந்த ஒரு கருத்து அர்ஜுன்சிங், என். டி. திவாரி, சீனி இறக்குமதி மோசடி தொடர்பாக அமைச்சர் பதவியிலிருந்து விலகிய கலபனாத்ராய் ஆகியோரை உற்சாகப்படுத்தி உள்ளது.

''சோனியா, டில்லி வீதிகளில் பிச்சை எடுக்கவும் தயார். ஆனால் அரசியலில் ஈடுபடமாட்டார்'' என நேரு குடும்பத்தின் நெருங்கிய சகாவான அமைச்சர் மெஹம்மட் யூனுஸ் தெரிவித்ததாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி ஒன்றுக்கு 10, ஜன்பத் வீதி வாசஸ்தலத்திலிருந்து மறுப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

**கட்சிக்குள் பிளவு**

அர்ஜுன்சிங்கின் வெளியேற்றம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி விட்டது.

காங்கிரஸின் 109 வருட காலச் சரித்திரத்தில் தற்போதைய கட்டமும் ஒரு நெருக்கடியான கட்டமே.

கேரள முதலமைச்சர் கே. கருணாகரன், பஞ்சாப் முதலமைச்சர் பீன்சிங், ஹரியானா முதலமைச்சர் பஜன்லால் ஆகிய மூவரும் அர்ஜுன்சிங் மீது கடும் நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கோரிவந்தவர்கள்.

காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் கமிட்டியின் தலைவரும், ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சருமான விஜயபாஸ்கர ரெட்டி, விமானப் போக்குவரத்து அமைச்சர் குலாம் நபி அஸாத், விவசாய அமைச்சர் பால்ராம் ஜாக்கர் ஆகியோரும் இவர்களுக்கு ஆதரவானவர்கள்.

ஏ. கே. அன்ரனி, என். டி. திவாரி, வாழப்பாடி ராம



நரசிம்ம ராவ்

மூர்த்தி, எம். வெ. போரேடார் ஆகியோர் அர்ஜுன் சிங்குக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன் அர்ஜுன் சிங் எழுப்பிய குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிவருகின்றனர். மகாராஷ்டிர முதலமைச்சர் சரத்பவாரும் (SharadPawar) இந்தக் கோஷ்டியுடனேயே சேர்ந்து நிற்கிறார். சோனியாகாந்தியின் ஆதரவாளர்களும் இந்தக் கோஷ்டியிலேயே உள்ளனர்.

மற்றும் மத்தியபிரதேச முதலமைச்சர் டிக்விஜாஜ்சிங் வனசூழல் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கமல்நாத், தமிழ்நாடுகாங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜி. கே. மூப்பனார், காங்கிரஸ் கட்சியின் பொருளாளர் சீத்தாராம் கேஸ்ரி ஆகியோர், நரசிம்மராவின் தலைமையின்கீழ் ஒன்று திரளுவது போன்று வெளியே காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அர்ஜுன்சிங் எழுப்பிய பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்க முடியாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்,

**ராவ்வின் எதிர்காலம்**

1991இல் பதவிக்கு வந்த நரசிம்மராவின் அரசாங்கம் 1992இல் நடைபெற்ற மத்திய பிரதேச, ஹிமாச்சால் பிரதேச சட்டசபைத் தேர்தல்களில் வெற்றிகளை ஈட்டிய போதிலும், கடந்த நான்கு வருட காலத்தில் குறிப்பிடத்தக்க சாதனை எதனையும் நிலைநாட்டத் தவறி இருந்தது.

அதே சமயம் லோகசபையில் சுமார் நான்கில் ஒரு பங்கு எம். பிக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தர பிரதேசம், பீஹார் மாநிலங்களிலும் காங்கிரஸின் செல்வாக்கு எதிர்பார்க்கப்பட்ட அளவு அதிகரிக்கவில்லை.

நிதி அமைச்சர் மன்மோஹன் சிங்கின் திறந்த பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது.

எனினும் உட்கட்சிப் போராட்டமும், எவரையும் அணைத்துப் போகாத ராவின் போக்கும் நரசிம்மராவின் செல்வாக்கை குறைத்தே வந்திருக்கின்றன.

அமெரிக்க அரசியலில் கறுப்பரான ஜெனரல் கொலின் பவெல் (Colin Powell) எதிர்கால ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பைப் பெற்றிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் ஒரு கறுப்பர் ஜனாதிபதியாக வாய்ப்பு இருக்குமானால் இந்தியாவில் இத்தாலியர் ஒருவர் ஏன் பிரதமராக வரமுடியாது என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெற உள்ள லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் வெற்றி பெறும் வாய்ப்பு சோனியா காந்தியின் அரசியல் பிரவேசத்திலேயே தங்கி இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ★

-சஞ்சாரன்-

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பிதழ்

# பச்சைத் தாவரங்கள் அழிக்கப்படின் உயிரினங்கள் அவலமடைய நேரும்

சூரியனின் ஒளிச்சக்தியை உணவில் உள்ளடக்கித் தருவதுடன் மட்டும் நின்றுவிடாது; அவ்வுணவை உடைத்து, நாமும் ஏனைய உயிரினங்களும் சக்தியைப் பெறத் தேவையான ஒட்சிசனையும் தரும் தாவரங்களிலும் மேலான பொருள் இவ் உலகில் வேறில்லை.

**போராட்டம் எதற்கு?**

பிறந்து விட்டோமே என்றதற்காக இவ்வுலகில் வாழ்வதற்கு இரண்டு மில்லியன் தாவர விலங்கினங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உயிரியும் தனக்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்காக ஈடுபடும் போராட்டமே வாழ்வதற்குப் போராட்டம் என்பதனால் கருதப்படுகின்றது என்றார் போல்ஸ்மன் (Boltzmann) என்ற உயிரியலாளர்.

ஒரு நேரம் உணவில்லையெனில் இளைக்கும் நாம் இரு நேரம் இல்லையெனில் படுத்துவிடுவதும் மகேஸ்வர பூசைகளில் போசன சபைகளில் நாம் இடம் பிடிக்க— இலைபிடிக்க—இடறி விழுந்தடித்து முந்துவதும், இப்போராட்டம் எவ்வளவு ஆவேசமானது என்பதனை விளங்கிக் கொள்வதற்குப் பொதுமதிக்கு மேலாக மதியழகு தேவையில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஏனைய விலங்குகள் இதற்கு விதிவிலக்கல்ல.

**பட்டினி ஏற்படாது தடுப்பன**

சூரியனிலிருந்து எல்லாத் திசைகளிலும் கதிர்படையும் அளவற்ற ஒளிச் சக்தியில் ஒரு சிறு பகுதியை இடைமறித்து ஒளித்தொகுப்பு என்னும் தொழிற்பாட்டின் மூலம் உணவில் இரசாயன சக்தியாக உள்ளடக்கும் பச்சைத் தாவரங்கள் அழிக்கப்பட்டால் எல்லா உயிரினங்களுக்கும் முடிவுகட்ட பட்டினியைத் தவிர்ந்த பலம் வாய்ந்த வலு வேறெதுவும் இருக்க முடியாது.

**சக்தி பாயுமேயன்றி சுழற்சியடையாது**

சக்தி என்பது சுழற்சியடைகின்ற அல்லது புதுப்பிக்கத்தக்க மூலவளமல்ல. சூரியனின் ஆக்கக் கூறுகளில் ஒன்றான ஐதரசன் (Hydorgen) ஆனது வெப்பக் கருத்தாக்கம் என்ற தோற்றப்பாட்டிற்குள்ளாகி ஈலியமாக (Helium) மாறும்போது தோன்றும் பிரமாண்டமான சக்தியே சூரியனிலிருந்து எல்லாத் திசைகளிலும் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

சூரியனின் முழுத்திணிவான $2 \times 10^{30}$ கிலோ கிராமிலிருந்து செக்கனுக்கு $4.7 \times 10^{9}$ கிலோகிராம் திணிவு சக்தியாக மாறுகின்றது. சென்ற 4 மில்லியன் வருடங்களில் சூரியத்திணிவில் 0.03% சக்தியாக மாறியுள்ளது. இங்ஙனம் தோன்றும் சக்தியில் பத்தாயிரத்தில் ஒரு பங்கே பூமியில் படுகின்றது. பாய்ந்து செல்லும் இச் சக்தி எங்கும் தேங்குவதில்லை; திரும்பிச் சூரியனை அடைவதுமில்லை.

**பாயும் சக்தியை தாமதிக்கச் செய்பவை பச்சைத் தாவரங்கள்**

இங்ஙனம் பாய்ந்து செல்லும் சக்தியைச் சிறிது காலம் உயிர் மண்டலத்தில் தாமதித்துத் தங்கிச் செல்ல உதவும் கற்பகதருக்களே பச்சைத் தாவரங்கள். பச்சை இலைகளில் தயாரிக்கப்பட்ட உணவு, உடனடியாக இலைக்கலங்களில் பயன்படுத்தப்படுமாயின் சக்தியின் தாமத காலம், ஒரு சில செக்கன்களே. தயாரிக்கப்பட்ட உணவு கிழங்கு, பழம், வித்துப் போன்றவற்றில சேமிக்கப்படின், சக்தியின் தாமதம் ஒரு சில மாதங்களாகலாம்.

அதே தாவரங்கள் வீழ்ந்து சதுப்பு நிலங்களின் அடியில் சென்று காலப்போக்கில் நிலக்கரியாக, கனிய எண்ணெய்யாக மாறின் அதன் தாமத காலம் பல ஆயிரம் வருடங்களாக இருக்கலாம். இங்ஙனம் தாமதித்துச் செல்லும் சக்தியிலேயே முழுக்க முழுக்க நாமும் தங்கி நிற்கின்றோம் ஏனைய உயிரினங்களும் தங்கி நிற்கின்றன.

**வினைத்திறனும் திறன் குறைப்பும்**

எனினும் எந்தவொரு பச்சைத் தாவரமும் தனது இலைகளில் விழும் சூரிய ஒளிச்சக்தி முழுவதையும் இரசாயன சக்தியாக மாற்றும் திறனுடையதல்ல சாதாரண வெளிக்கள நிபந்தனைகளில் பச்சைத் தாவரம் ஒன்றின் விளைத்திறன் 0.3% மட்டுமே. அதாவது இலைகள் மேல் [illegible] சக்தியில் 0.3% சக்தி மட்டுமே இரசாயன சக்தி[illegible]வில் அடைக்கப்படுகின்றது.

இதுவும் கூட மழைவீழ்ச்சிக் குறைவு, கனிப்பொருள் போசாக்கின்மை, தாழ்வான வெப்பநிலை போன்ற காரணிகளினால் மேலும் குறைக்கப்படுகின்றது.

இவை போதாதென்று, மிக நீண்டகால உயிரினத் தொழிற்பாடுகளின் விளைவாக, நல்லதொரு சுகந்தமான, சமநிலைத் தொகுதியாக ஆக்கப்பட்டு நிலவி வந்த உயிர் மண்டலத்தில், ஏறக்குறைய அரை மில்லியன் வருடங்களுக்கு முன் கடைசியாகப் புகுந்த மனிதன் என்ற கொடிய சுயநல விலங்கு விவசாய விஸ்தரிப்பு, வாழிட அமைப்பு வசதிகள், வாழ்க்கைத் தரம் போன்ற போர்வையில் தாறுமாறாகக் காடுகளையும் சோலைகளையும் தறித் தெறிகின்றான். மரக்கிளை ஒன்றின் முனையிலிருந்து கொண்டு கிளையின் அடியை வெட்டுவதைபொத்த அவனின் செயலால் வாழ்க்கை என்ற போராட்டம் முடிவடைய கனகாலம் இல்லை என்பதைச் சூழல் பற்றிய உணர்வுள்ள எவரும் [illegible] சூழல் என்றால் என்ன? [illegible]

## காடுகள், சோலைகளை தறித்தெறியும் மனிதன் என்ற கொடிய சுயநல விலங்கு

வீடு அல்ல. அது பல நிபந்தனைகளின் கூட்டுமொத்தத்தைக் குறிக்கும் சொல். உயிரினங்களின் உறைவிடங்களான பொருக்கெனப்படும் பூமியின் மேற்பரப்பும் (தரை மண்டலம்) நீர்மண்டலமும், வளிமண்டலமும், உயிர் மண்டலம் என்ற பதத்தால் கருதப்படுகின்றன. இக்கருத்தினை முதன்முதல் எடுத்துக் கூறியவர் இலாமார்க் Jean-Baptiste de Lamar k) ஆவர்.

இவ் உயிர்மண்டலமே உயிரிகளின் 'வீடு'. வெப்பம், ஒளி, நீர், வளி, கனிப்பொருள்கள், மூலவளங்கள் ஆகிய உயிரற்ற நிபந்தனைகளும், தாவர விலங்கினங்களை உள்ளடக்கிய உயிர் நிபந்தனைகளுமே எமது ''வீட்டின்'' சூழலாகும்.

**மனிதனின் தலையீடு**

இச்சூழல் மனிதனின் தலையீட்டினால் மாற்றப்படுகின்றது. ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் புதிய நிபந்தனைகள் ஆகின்றன மனிதனின் வரலாற்றில் மூன்று தடவைகள் அவனின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பே சூழல் மாற்றமடைவதற்கு காரணியாகும் — ஆகின்றது 20 ஆயிரம் வருடங்களுக்குமுன் வேட்டையாடுவதற்காகவும், உணவுப்பொருள்களைச் சேகரிப்பதற்காகவும் அவன், கருவிகளைப் பயன்படுத்திய போது முதல் தடவையாக சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டது. 6 ஆயிரம் வருடங்களுக்குமுன் அவன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டபோது இரண்டாவது தடவையாக ஏற்பட்டது. சென்ற 300 ஆண்டுகளாக விஞ்ஞான, தொழில்நுட்ப மருத்துவத் துறைகளில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னேற்றங்களால, அதிகரிப்பு என்ற நிலையைத் தாண்டி அது குமுறலாக மாறிவிட்டது முன்னைய இரு சந்தர்ப்பங்களிலும் குலைக்கப்பட்ட சூழல் புதிய நிலையில் சமநிலையை மீண்டும் பெற்றது.

ஆனால் இன்று மீளவும் தலைதூக்க முடியாத அளவிற்கு சூழலானது. மனிதனால் சுரண்டப்படுகின்றது— அத்துமீறலுக்குள்ளாகின்றது. சமநிலை குறைவதற்குக் காரணிகளாக இந்த அதே

படியாதவன்

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் தனக்குக் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையும் மனிதனுக்குண்டு. ஆனால் உலகத் தலைவர்களும் விஞ்ஞானிகளும் சனத்தொகைக் குமுறலைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பை நாடுவது இந்நம்பிக்கையின் தளர்வினை எடுத்துக் காட்டுகின்றது.

**விலங்கினம் தங்கிநிற்கும் பொருள்**

பெருகிவரும் சனத்தொகைக்கு உணவளிக்கவும் சூழலைச் சமநிலையில பேணவும் எம்மிடம் கைவசமுள்ள ஒரேயொரு நம்பிக்கையான பொருள் பச்சைத்தாவரங்களே. அவையே எரிபொருள்களின் பக்கவிளைவுகளில் ஒன்றான காபனீரொட்சைட்டை உறிஞ்சுவதன் மூலம், சூழல் வெப்பநிலை உயராது பேணுகின்றன. மண்ணரிப்பைத் தடுத்து மண்வளம், மழைவளம் இரண்டையும் பேணுகின்றன; தூசிகளைத் தடுத்து இரைச்சல்களைத் தணிக்கின்றன; குளிர்ச்சியும் நிழலும் தருகின்றன; எல்லோரும் தாவர போசணிகளாக மாறுவீர்களாயின் உங்கள் எல்லோருக்கும் உணவளிக்க எம்மால் முடியுமென்று கூறுகின்றன.

**உணர்வின்மையின் விளைவுகள்**

தாவரங்களின் இவ்விதசுகங்களை நாம் உணராத, காரணத்தினாலேயே உயிர் வேலிகளை வெட்டித் தறித்துவிட்டு மதில் வேலிகளைக் கட்டுகின்றோம் முற்றங்களில், கோடிப்புறங்களில் நின்ற மரங்களை வீழ்த்தி விட்டு, வீட்டைச் சுற்றிவரச் சீமெந்துத் தரை அமைக்கின்றோம்: உணவுப்பொருள்களைத் தரும் மரங்களைப் புறக்கணித்து வளவுகளில் குரோட்டனுங்களையும் வளர்க்கின்றோம். வளவில் பனைமரங்கள் நின்றால் பகிடி பண்ணுவார்கள் என்று தறித்து விடுகின்றோம்.

இயற்கை பட்டங்கரமானது எவ்வித வடிவிலும் சரி. தாவர அழிப்பைத் தொடருவோமாயின் எங்களுக்கும், ஏன். முழுச்சாகியத்திற்குமே முடிவு காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை இன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cupboards) விற்பனைக்குண்டு. சனோ வெல்டிங் வேக்ஸ், 379, பீச்றோட், குருநகர். (பாடும்மீன் சனசமூக நிலையத்திற்கு முன்பாக) (8215)

சிங்கர் மெஷின், கட்டில்கள், கந்தோர் மேசை, சிசில் பிறிஜ், றெஸ்சிங் ரேபிள், வோசிங் மெஷின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (34895)

Honda CD 70 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (34897)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் அரசடி வீதியில், தஞ்சி ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இல. 83, அரசடி வீதியில் தொடர்பு கொள்ளவும். (34826)

கங்கேரியன் சில்க்கிப் பிராமா குஞ்சுகள், அடை முட்டை, கோழி, விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு: த முத்தையா, 185, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [8207]

Broiler இறைச்சிக் கோழிகள் காலை 7மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [34883]

### WANTED

Applications are invited from Suitable candidates for the post of Cost Accounts clerk cum Store clerk. age below 40 years. Apply before 31st Jan. 1995 No. 754, C/o Uthayan Jaffna. [சி-444]

### விற்பனையாகின்றது

இந்து நாகரிகம் – சைவசித்தாந்தம் உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு வேத பாரம்பரியமும்; சைவ சித்தாந்தமும் இந்து தர்மமும்; வர்ண தர்மமும். ஆசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தக சாலை. யாழ்ப்பாணம். (34885)

### காணவில்லை

இளம மஞ்சள கறுப்பு நிறமுடைய வளைந்த கொம்புகளையுடைய இரண்டு பெரிய உயர்ந்த இனப்பசுக்களை 11ஆம் திகதியிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் கீழ் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். செ. சந்தியாப்பிள்ளை, No 9, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். [34894]

### உதவியாளர் தேவை

தாவடியிலுள்ள ஓர் வைத்தியசாலையில் பணி புரிவதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. மாலை 4-00 மணிக்குப் பின்பு சந்திக்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி Dr. P. இராமநாதன், தாவடிச் சந்தி, கொக்குவில். (34884)

### எழுத்தாளர் தேவை

புகைப்படச் சஞ்சிகை வெளியிடுவதற்கு பத்திரிகை எழுத்துத் துறை அனுபவமும் தமிழில் கட்டுரை எழுதும் ஆற்றலும் உடையவர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். 'அருச்சுனா' திருநெல்வேலி. [34888]

### மணமகள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள கனேடியப் பிரஜையான எனது உறவினருக்கு 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். ந. சுரேந்திரன், 134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [34891]

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களும் தொடர்பு கொள்ளவும். சகல குறிப்புகளும் உண்டு. எல்லா நாட்களிலும் படம் குறிப்புடன் தொடர்புகொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே. கே எஸ். றோட், மல்லாகம். [7875]

### MATHS - ENGLISH - 95

ஆண்டு 6 இலிருந்து O/L வரை விசேடமாக உயர்ந்த பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் B Sc. 85, மணல்தரை லேன், திருநெல்வேலி. [34893]

### திருமண மலர்

''ஜோஸ்யர் பெப்றவரி'' இதழ் திருமண மலராக வெளிவருகின்றது. திருமணம் பற்றிய அரிய விடயங்களை உள்வாங்கவும், பலருக்கு சொல்லவும் ஆறு ரூபாய்க்கு நாளை கிடைக்கும். [34889]

### சோப் / சலவைத்தூள்

மில்க்வைற் நீல சோப் / சலவைத்தூள் கடின நீரிலும் நுரைத்து அழுக்குகளை விரைவாக நீக்குகிறது. நீல சோப்-6/- சலவைப்பவுடர் – 6/- 25 வெற்றுப்பக்கற்றுகள் / மேலுறையில் உள்ள 25 திருக்குறள்களை வெட்டி அனுப்பி ஓர் அப்பியாசக் கொப்பி பெறுங்கள். ''மில்க்வைற்'' (சி/440)

### புலமைப் பரிசில் - 95

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

## ஐடியல் கல்வி நிலையம்

42/1, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
(யாழ். தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்)

### G. C. E. (O/L) - 1995
### விசேட வகுப்புக்கள்

### ஆரம்பம்: 31 - 1 - 1995

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா செல்வவடிவேல் |
| கணிதம் | — | எஸ். சண்முகநாதன் |
| ஆங்கிலம் | — | ரி. சகாதேவன் |
| சமூகக்கல்வி | — | எம். இக்னேஷியஸ் |

(மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்)

* ஆண்டு - 5 புலமைப் பரிசில் வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
* விசேட ஆங்கிலம் - 2 பிரிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாணவர்களின் அறிவுத் தரததிற்கேற்ப சேர்ந்துகொள்ளலாம்.
* சிங்கள வகுப்புக்கள் - 1 ஆம் பிரிவு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

[8214]

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
யோகன்னா அழகம்மா றிச்சேட்

மண்ணுலகில்: 02 — 09 — 1919
விண்ணுலகில்: 29 — 01 — 1994

''நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.''

2 தீமோ. 4:7

நித்திய வீட்டில் களிப்புடன் வாழும் உங்களை நினைவு கூருகின்றோம்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை,
இறை மக்களும் திருப்பணியாளர்களும்.

(34896)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்: 16 — 10 — 1919

ஆண்டவன் அரவணைப்பில்: 30 — 12 — 1994

### திருமதி கனகம்மா கதிர்காமு

அன்பின் பிறப்பிடமே! ஆருயிர்த்தாயே!
பாசத்தின் ஊற்றே! பண்பின் திருவுருவே!
அன்போடரவணைத்து அமுதூட்டி அறிவூட்டி
இன்பக் கதை கூறி எங்களையும் வாழவைத்தீர்!
மீளாத் துயில் கொண்டீர் மீண்டுமெப்போ
காண்பதம்மா!
ஆண்டு பல சென்றாலும் அன்னையே உனை
மறவோம்!

வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (29-01-95) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்றைய தினம் நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா ஈடேற்றத்துக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்'
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

க. தவராசா ''தவலட்சுமி''
சென் மேரீஸ், 2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(34872)

## 14-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 06 — 1918
மறைவு: 29 — 01 — 1981

### அமரர் கனகசபை தணிகாசலம்

அன்பிலே, பண்பிலே பாசத்திலே உயர்ந்தோனாய்த் திகழ்ந்து, எமது வளமான வாழ்வுக்கு வித்திட்டவரே! உங்கள் நீங்காத நினைவோடு வாழும்;

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''தணிகை''
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(7877)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 18 — 03 — 1937
மறைவு: 08 — 02 — 1994

### திருமதி துரைராசா பரமேஸ்வரி

திதி: 29 — 01 — 1995

அன்பின் திருவுருவே, பண்பின் பிறப்பிடமே, பக்தியின் சிகரமே, பார்போற்றும் உத்தமியே - நீர் இப்புவிதனைநீங்கி ஓர் ஆண்டு மறைந்தாலும் உம் நினைவு அணையாத தீபமாய் என்றுமே ஒளிர்ந்திடும் எம் மனதில்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நெல்லண்டையானைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், கணவன், மக்கள்,
மருமக்கள், சகோதரங்கள்
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(34864)

## நெடுங்குளம் புனரமைப்பு

வீணாகிப் போகும் மழை நீரைச் சேமித்து பயிர் செய்கையை விரிவுபடுத்தும் நோக்குடன் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள தனங்கிளப்பு நெடுங்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (க)

## நுளம்புகளை அழிக்க புகைமருந்து!

மட்டக்களப்பில் மூளைக் காய்ச்சல் பரவி வருவதை அடுத்து—

நுளம்புகளை அழிப்பதற்காக விசேட புகை மருந்து அங்கு அனுப்பப்பட இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (எ]

### பச்சைத்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

றைய உலகத் தலைவர்களும், விஞ்ஞானிகளும், மனித நேயமுடையோரும் உணரத் தொடங்கி விட்டனர்.

அவர்களுடன் இணைந்து தாவரங்களையும் எமது சூழலையும் பாதுகாக்க நாம் எல்லோரும் முனையாவிடின் இயற்கை என்ற நிகரற்ற பலம்வாய்ந்த ஆசானிடம் நாம் ''நல்ல பாடம்'' படிக்க நேரிடும். இயற்கையானது இரத்தம் தோய்ந்த பற்களையும் நகங்களையும் கொண்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ★

## கலை வர்த்தக கல்லூரி

### C. C. A.

374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

### G·C·E·A/L95

கணக்கியல்
பிரத்தியேக வகுப்பு

**PERSONAL CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்
ஆசிரியர்: K. சிறி
B Com. (Hons)

ஆரம்பம்:

**30 · 01 · 95**

மாலை 5-00 மணி
திங், செவ்., வியா., வெள்ளி 5—6

குறிப்பிட்ட அளவு மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

- நிர்வாகி

(சி-325)

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

## VADDUKODDAI

முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன.................

* We guide you through the simplest path to emerge as a graduate in technology!
Our courses lead you to the "Open University of Sri Lanka" with exemptions!
At a state of total breakdown in communication, it is a fine opportunity......
It's your's.... If you are looking for it...... *

* நீங்கள் ஒரு தொழிற்றுறைப் பட்டதாரியாய் உருவெடுக்க மிகச் சுளுவான மார்க்கத்தை நாங்கள் சமைக்கிறோம்..... இங்கே தொடங்கும் பயிற்சி நெறி உங்களை 'திறந்த பல்கலைக் கழகத்திற்கு' — பாடவிதான விலக்குகளுடன்— இட்டுச் செல்லும்!... மாணவர்களே தொடர்புகள் அறுந்து போயுள்ள அகாலத்தில்— 'இது' ஓர் அற்புத வாய்ப்பு; வசப்படுத்திக் கொள்ளுங்கள்!! *

### ★ DIPLOMA COURSES
(English Medium)

1. Civil Draughtsmanship — 1 Year
2. Computer Programming & Data Processing — 1 Year
(BASIC, Cobol, d-BASE III+ & Pascal) — Practicals on IBM — PC AT & MAT 385 industrial Controller
3. Advanced Diploma in Computing — 1 Year
(Syllabus includes British Computer Society & Australian Computer Society)

★ Educational Qualification:
Six Passes in G. C. E. (O/L) — with Maths - C & English - S and for Advanced Computing two Passes in G. C. E. (A/L)

* Closing date: 24th of Feb. 95
* Interview: 1st and 2nd of March '95

### ★ TECHNICIAN CERTIFICATE COURSES (English Medium)

1. Air-Conditioning & Refrigeration — 1½ Years
2. Radio & T.V. Servicing — 1 Year
3. Automobile Technology — 1 Year

★ Educational Qualification:
G. C. E. (O/L) with Maths & Science - S

### ★ CRAFT COURSES
(Tamil Medium)

1. Machine Shop Practice — 1 Year
(இயந்திரப் பட்டறைப் பயிற்சி)
2. Electrical Wiring & Installation Practice — 1 Year
(மின்னிணைப்பும், நிர்மாணமும்)
3. Welding Practice — 1 Year
(உலோக - ஒட்டு வேலைப் பயிற்சி)

கல்வித்தகைமை:
க. பொ. த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்

[சி-437]

— DIRECTOR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## எங்கள் மண்ணில் எங்கள் கலைகள்

சம்பந்தனின் செந்தமிழ் போன்று தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை நாம் மீண்டும் உருவாக்கித் தருவோம்.

நாங்கள் பெறப்போகும் மண்ணை நிர்வகிக்கக் கூடிய தான பல்துறை ஆற்றல் மிக்கவர்களை உருவாக்குவதே எமது நோக்கம்.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற போராளி வசந்தனின் மிருதங்க அரங்கேற்ற விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

இறைவனை இசையால் மயக்கி அவனால் ஆட்கொள்ளப்பட்டவர் திருஞானசம்பந்த சுவாமிகள். அவரது பிஞ்சுப் பருவத்து இசையில் இறங்கி பொற்றாளம் பரிசளித்தவர் சிவன்.

தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு உயிரும் உடலும் போன்றது. இசை மட்டுமன்றி தமிழர்களின் ஏனைய கலைகளும் சிறப்புடையவை. தமிழர்களின் கலைப் பெருமை கால எல்லையற்றது.

தமிழும், கலைகளும் வளர வாழ உதவியவர்கள், உழைத்தவர்கள் தமிழ் மன்னர்கள். எனினும் ஒருசில நூற்றாண்டுகளாக நிலவிய வெளி நாட்டார், வேற்று இனத்தார் ஆதிக்கத்தால் தமிழும், தமிழர் கலைகளும் பொலிவிழந்து போகும் நிலை உருவாகிற்று.

இலங்கையைப் பொறுத்த வரையில், சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழையும், தமிழர் கலைகளையும் பேணி வளர்ப்பதற்கு அரசாங்க ஆதரவு இருக்கவில்லை. எனினும் தமிழ் மக்கள் தங்கள் கலைகளை இயன்ற வரை பேணினார்கள்; பெரிதாக வளர்க்க முடியவில்லை.

இந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து நிறைவாக்கும் புதியயுகம்ஒன்று இப்போது மலர்ந்துள்ளது எமது கலைகளை நாங்களே வளர்ப்போம்; அவற்றின் பண்டைய சிறப்பை மீள்விப்போம் என்று புதிய தலைமுறை புத்தெழுச்சியுடன் செயற்பட்டு வருகிறது.

மொழியும், கலைகளும் கலாசாரங்களும் தமிழர்களின் தேசிய தனித்துவத்தின் அடிப்படை அம்சங்கள். அவற்றை வளர்ப்பது என்பது தமிழ்த் தேசியத்தின் மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும்.

இதனை எங்கள் இளம்சமுதாயம் நன்கு உணர்ந்து தமிழையும் கலைகளையும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் வளர்த்து வருகிறது.

தமிழர்களின் பாரம்பரிய கலைகள் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் புத்துயிர் பெற்று மிக வேகமாக வளர்ச்சி அடைவது கண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படும் காலமாக இது மிளிர்கிறது.

உரிமைப் போராட்டத்தோடு சம காலத்திலேயே மொழி, கலை, கலாசாரங்களை மீள்விக்கும் போராட்டமும் நடந்துகொண்டிருக்கிறது.

தமிழினதும், தமிழர் கலைகளினதும் பழமைப் பெருமையை நிலைநிறுத்தி, புதுமைப் பொலிவை உண்டாக்கும் இந்தப் புதிய சகாப்தத்தின் ஆதார புருஷர் தலைவர் பிரபாகரனே. அவரது தீர்க்க தரிசனம் ஈழத்தமிழா நாட்டின் தமிழ்த் தேசியத்தை நீண்டு நிலவச் செய்யும்.

தமிழர்கள் அரசியல், பொருளாதார, சமூக விடுதலை பெற்று தமது மண்ணில் மொழியையும், கலைகளையும் மேம்படுத்தி பொலிவுற்று வளமுடன் வாழ்வதற்கான பலம்மிக்க அத்திவாரம் அமைக்கப்பட்டு வருகிறது. என்றுமே இல்லாத மறுமலர்ச்சி, புதுவகைப் புரட்சி நடந்துகொண்டிருக்கிறது.

வளரும் பயிரை முளையில் தெரியும். தமிழர் கலைகள் ஈழத்தில் ஓங்கி வளர்ந்து அவர் தம் வரலாற்றுச் சிறப்பை மீட்கும் என்பது இப்போதே தரிசனமாகிறது.

ஈழத்தில் இப்போது முகிழ்க்கும் கலை மொட்டு விரிந்து, மலர்ந்து, மணம் வீசி, காயாகி, கனியாகி, தமிழர் விழுமியத்துக்குச் சுவை சேர்க்கும் நாள் தொலைவில் இல்லை.

எங்கள் மண்ணில் எங்கள் கலைகள் பூங்காற்றாக என்றும் மணம் பரப்பட்டும்!

# சந்திரிகாவின் நிலைப்பாடு மாறுகிறது; சமாதானப் பேச்சும் தரித்து நிற்கிறது!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் தரித்து நின்று விட்டன. பேச்சுக்களில் பெரிதளவில் முன்னேற்றம் எதுவுமின்றி நாள்கள் நகர்கின்றன. நான்காம் கட்டப் பேச்சு நடக்குமா, எப்போது நடைபெறும் என்பன குறித்து துரும்பளவு துப்பும் இல்லை.

மூன்றாம் கட்டப்பேச்சுக்களின் பின்னர் முட்டுக்கட்டை உண்டாகி விட்டதாகவே பரவலான கருத்து கொழும்பில் நிலவுகிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டுப் போக்குவரத்துக்கு பூநகரிப் பாதையைத் திறந்து விடுவது குறித்து, விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை என்றும், அதனாலேயே முட்டுக்கட்டை நிலை தோன்றியுள்ளதாகவும் அறிய வந்துள்ளது.

பூநகரியில் இப்போது இராணுவம் நிற்கும் நிலையிலிருந்து குறிப்பிட்ட தூரம் தள்ளிப் போவதற்கு மட்டுமே அரசாங்கம் தயாராக உள்ளது. இராணுவ முகாமை அகற்றுவதற்கு இராணுவம் இணங்க மறுக்கிறது!

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முற்றாகத் தீர்க்காத நிலையில் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு அரசு விரும்புகிறது. ஆனால் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டே அரசியல் விவகாரம் குறித்துப் பேச வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. இரண்டில் எது முந்தி எது பிந்தி என்பதில் இரு சாராருக்கும் இடையே உள்ள முரண்பாட்டாலும் முட்டுக்கட்டை நிலை தோன்றியுள்ளது.

இதனாலேயே மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையோடு முட்டுக்கட்டை உண்டாகி விட்டதாக கொழும்பில் அரசியல் அவதானிகள் வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்கத் தொடங்கி விட்டனர்.

### கேள்விக் கணை

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடக்கும் செய்தியாளர் மாநாடு கடந்த புதன்கிழமை நடைபெற்ற போது—

பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டதா என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் தர்மசிறி சேன நாயக்காவிடம் செய்தியாளர்கள் கேள்விக் கணை தொடுத்தனர்.

அடுத்த கட்டப் பேச்சைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகளின் பதிலுக்கு அரசு காத்திருக்கிறது. அவர்களின் பதில் இந்த வாரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம்; கிடைக்கவில்லை. அதனால் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டு விட்டதாகக் கூற முடியாது. அவ்வாறு கூறப்படுவதில் உண்மையில்லை.— என்று அமைச்சர் பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் கிடைக்காததாலேயே நான்காம் கட்டப் பேச்சுக்களை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினாலும், பூநகரிப் பாதை விடயத்தில் அரசு சாதகமான ஒரு முடிவை எடுக்க முடியாததினாலேயே முட்டுக்கட்டை தோன்றியுள்ளது என்பதனை எவரும் உணரமுடியும்.

## வாழ்க்கைப் பிரச்சினையை தீர்ப்பது தொந்தரவு தரும் நிபந்தனையா?

இது விடயத்தில் கூர்ந்து நோக்கினால் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதும் அதற்கான உண்மையான காரணமும் பளிச்சென்த் தெரியவரும்.

### அரசின் புதிய நிலைப்பாடு

தமிழ் மக்கள் அமைதியை விரும்புகிறார்கள் என்பதால்—

வடக்கை புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்பதால்—

பொருளாதாரத் தடை நீக்கம், போக்குவரத்துப் பாதை திறத்தல் என்பனவற்றை முதன்மைப் படுத்தாமல் அரசியல் தீர்வு குறித்துப் பேச வேண்டும் என்பதே அரசாங்கத்தின் புதிய நிலைப்பாடாக உள்ளது.

அதனால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் வைக்கும் கோரிக்கைகளை, பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளாக அரசாங்கம் பார்க்கிறது. அந்தப் பார்வையை அடிப்படையாகக் கொண்டே நிபந்தனையின்றிப் பேசுவதற்குத் தயார் என்று கூறிய விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு மாறி விட்டதாக பிரசாரம் நடக்கிறது.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு வந்து ஒவ்வொரு நிபந்தனைகளை முன்வைத்து அவற்றைப் பெற்று வென்று வருகிறார்கள்; ஒவ்வொரு கட்டப் பேச்சின்போதும் முக்கிய கோரிக்கைகளை வைத்து அவர்கள் பெற்று விடுகிறார்கள் என்ற கருத்தை கொழும்புப் பத்திரிகைகள் பலவும் பரப்பி வருகின்றன.

ஒவ்வொரு கட்டப் பேச்சின்போதும் ஒவ்வொரு கம்பத்தை அரசாங்கம் பாய்ந்து பேச்சை தொடர வேண்டி உள்ளதாக கேலிச்சித்திரங்களையும் பிரசுரிக்கின்றன.

### மாறான கருத்துத்தரும் பிரசாரம்

இவற்றைப் படிக்கும், பார்க்கும் எவருக்கும், விடுதலைப் புலிகள் போடும் ''நிபந்தனை''களை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது; விடுதலைப் புலிகள் போடும் தடைக் கம்பங்களை அரசாங்கம் மிகச்சிரமப்பட்டுத் தாண்டியே பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவேண்டியுள்ளது என்ற எண்ணமே உண்டாகும். அது மட்டுமா? விடுதலைப் புலிகள் போடும் தாளத்துக்கு அரசாங்கம் ஆடுகிறது என்ற உண்மைக்கு முற்றிலும் மாறான ஓர் கருத்தையும் தோற்றுவிக்கும்.

இந்தப் பிரசாரங்களைக் கண்டு அஞ்சி, அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்ற முயல்வதாகவும் கொள்ளலாம்

பதவிக்கு வந்ததும் வடபகுதி மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையை தீர்க்கும் நோக்குடன் தானாகவே பொருளாதாரத் தடையை தளர்த்திய சந்திரிகா, இப்போது அன்றாடப் பிரச்சினைகளை ஓரங்கட்டி விட்டு, அரசியல் விவகாரத்தையே முதன்மைப்படுத்திப் பேச விரும்புகிறார்.

பிரெஞ்சு நாட்டின் பிரபல நாளிதழான ''லீமொண்டே''க்கு அவர் வழங்கிய

**அரசியல்**

பேட்டி, அவரது மாற்றத்தை மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகளை அதிகரித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுதல், பூநகரி முகாமை அப்புறப்படுத்துதல் ஆகியனவும் அவற்றுள் அடங்கும் –

வடக்கில் உள்ள முகாம்களை அகற்றுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகிய விடயங்களை அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்குரிய முன் நிபந்தனைகளாக அவர்கள் சமர்ப்பித்துள்ளனர். அவற்றை ஏற்றுக்கொள்வது நியாயமானதாகத் தெரியவில்லை — என்று ஜனாதிபதி சந்திரிகா தமது பேட்டியின் போது கூறியிருக்கிறார்.

### நிபந்தனை விதிக்கும் பேட்டி

அரசியல்தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்காகவே போர் இடை நிறுத்தம் செய்யப்பட்டதாகவும், அதற்கு முதலிடம் கொடுக்காத விதத்தில் செயற்படும் பட்சத்தில் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவது பலனற்றதாகி விடும் — என்றும் ஜனாதிபதி மேலும் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் கோரிக்கைகளை விடுப்பதாக— ''நிபந்தனை'' விதிப்பதாக— கூறும் சந்திரிகா —

பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வு குறித்தே முதலிடம் கொடுத்துப் பேசவேண்டும் என்று தாம் நிபந்தனை விதிக்கும் தொனியில் பேட்டி வழங்கி இருக்கிறார்!

மொத்தத்தில் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை நிலை தோன்றியிருப்பதற்கு சந்திரிகாவின் நிலைப்பாடு மாறியிருப்பதே காரணமாக உள்ளது அரசியல் விவகாரத்துக்குத் தீர்வு கண்டால் ஏனைய பிரச்சினைகள் தாமாகவே நீங்க வழியேற்படும் என்று சந்திரிகா புதிதாக நினைக்கிறார் போலும்!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு, அரசியல் தீர்வு நாடி மெதுமெதுவாகவே நகர முடியும் என்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### முந்திய கருத்து

இந்த நிலைப்பாடு நிச்சயமாக அரசாங்கக் குழுவின் தலைவர் பாலபட்டபெண்டியின் கருத்தாக இருக்கமுடியாது அவரது தலைவர் — எஜமான் — சந்திரிகாவின் கருத்து என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

நான்கு மாதங்களில்— மூன்று தடவைகள் பேசிய பின்னர்—சந்திரிகா இவ்வாறு திடீரென நிலைமாறுவது ஏனோ?

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதில் காலம் போய்விடும் என்று சந்திரிகா கருதுகிறாரா? அதில் காலத்தை கடக்க விடாமல், மக்களின் வாழ்க்கை இயல்பு நிலையை மீளக்கொண்டு வருவதற்கு வேகமாக உழைக்கக் கூடிய சக்தியும் ஆற்றலும் அதிகாரமும் அரசாங்கத்திடம் இல்லையா?

### தொந்தரவுகளா?

அவை அரசிடம் இருந்தால் தனது சொல்திறனால் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தமான விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை தொந்தரவாகக் கருத வேண்டியதில்லை. நிபந்தனைகளாகப் பார்க்க வேண்டிய தேவையும் வராது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை ஓர் அரசாங்கம் தனது கடமையாகக் கருத வேண்டும். தொந்தரவாகப் பார்க்கக் கூடாது மற்றவர்கள் போடும் நிபந்தனையாக நோக்கக் கூடாது.

அரசு அவ்வாறு நோக்கத் தொடங்குகிறது என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். அந்த இரண்டில் ஒன்று இயலாமை இரண்டாவது சமாதான முயற்சிகளை திசை திருப்பத் திட்டமிடுதல்.

இந்த இரண்டில் சந்திரிகாவைப் பொறுத்த மட்டில் முதலாவது காரணமே அனேகமாகப் பொருந்தக் கூடியது என்று ஊகிக்கலாம். அரசுக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள சில சக்திகளைத் திருப்திப்படுத்தும் வகையில் செயலாற்றும் போது தமது முந்திய நிலைப்பாட்டை மாற்றுவதாலும் இந்த இயலாமை வரலாம்.

### இப்படியும் இயலாமை

தங்கள் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, தங்களது நிலைப்பாட்டை உறுதி செய்வதற்காக, ஜனாதிபதியுடன் சேர்ந்து பணிபுரியும் சக்திகள் சில தெரிவிக்கும் ஆலோசனைகளை அப்படியே அவர் விழுங்கிக் கொள்வதாலும் இயலாமை உண்டாகலாம்!

தாம் நினைத்ததை செய்து முடிப்பதில் சந்திரிகா கெட்டிக்காரர் என்ற கருத்தே அவருடன் நெருங்கிய வட்டாரங்களில் நிலவுகிறது. அடுத்தவர்களின் செல்வாக்கு அவரிடம் பெரிதாக ''வேலை செய்யாது'' என்றும் கூறப்படுகிறது.

அப்படியாயின், அவர் தமது முந்திய நிலைப்பாட்டில் இருந்து மாறும் அளவுக்கு அவரிடம் இயலாமை ஏற்பட்டது எப்படி?

அவரிடம் இயலாமையும் இல்லை; திசை திருப்பும் நோக்கமும் இல்லை என்றால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அடுத்த தரப்பினரின் விசுவாசத்தை சந்தேகிக்கிறாரா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

### சலிப்பு ஆகாது

இரண்டு தரப்புகள் தமக்கிடையே உள்ள பிரச்சினைகளை, பிணக்குகளைத் தீர்ப்பதற்காக பேச்சுக்களில் ஈடுபடும்போது இரண்டு தரப்புகளும் ஒருவர் மீது மற்றவர் பரஸ்பரம் நம்பிக்கையும்,

**உதயசந்திரன்**

விசுவாசமும் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் எதிர்பார்க்கும் சமரசம் உண்டாகுவதுகடினம் பிரச்சினையும் தீராது; பிணக்கும் நீங்காது

பிணக்கை நீக்க வேண்டும்; பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று மனதார விரும்பும் எவரும், அடுத்த தரப்பின் மீது நம்பிக்கையும், விசுவாசமும் வைக்காமல் செயற்படமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் சந்திரிகா மீது நம்பிக்கை வைத்தே பேச்சுவார்த்தை நடத்த இணங்கினார்கள். ஆனால் சந்திரிகா பேசும் தொனி அவர் புலிகள் மீது நம்பிக்கை வைத்து சமாதானப் பேச்சுக்களை நடத்த முன்வரவில்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது ஒரு பக்க நம்பிக்கை எல்லோரும் விரும்பும் சமாதானத்துக்கு வழிகோலமாட்டாது.

பேச்சுவார்த்தை மேசை என்றால் கருத்து முரண்பாடுகள், வெவ்வேறு நிலைப்பாடுகள் தோன்றும் அவற்றை முறுகல் நிலைக்கு உயர்த்திச் செல்வது ஆக்கபூர்வமான விளைவைத் தராது.


இருதரப்பும் விட்டுக் கொடுக்கவும், தீர்வு ஒன்றைக் கண்டு விட வேண்டும் என்ற இலக்குடன் செயற்படவும் தவறினால் விளைவு பாதகமாகவே இருக்கும்

பேச்சுவார்த்தைக்கு முன் வந்து விட்டு சலிப்புடன் பேசுவது, முறுகல் நிலையைத் தோற்றுவிப்பது அரசியல் விவேகமாகாது.

இலங்கை மக்களும், சர்வதேசங்களும் அரசு - புலிகள் பேச்சுக்கள் நல்விளைவைத் தரும் என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்க சந்திரிகா சலிப்படைவது அல்லது தளர்வடைவது ஏமாற்றத்தையே தரும். ★








# பேராற்றலின் பிறப்பிடமான மனித மூளையின் சக்தியை தினசரி தியானத்தால் பெருக்கலாம்

மனிதன் மண்ணில் தோன்றும் போது மூளையுடனேயே பிறக்கின்றான். ஆதிகால மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் மூளையின் நிறை கிட்டத்தட்ட ஒன்றாக இருக்கின்றது. ஆயின் மூளையின் ஆற்றலைப் பொறுத்த வரை அது வளர்ச்சி அடைந்திருக்கிறது, இன்னும் வளர்ச்சி அடையும்.

மனிதர்களுக்கு கிட்டத்தட்ட ஒரே நிறையுடைய மூளை இருந்தாலும் அதன் ஆற்றலின் வேகத்தில் எத்தனை எத்தனை வேறுபாடு!

பேராற்றலின் பிறப்பிடமானது மூளை, அதன் ஆற்றலை ஒரு சில மனிதர் ஒரு வரையறைக்குள் அடக்குகின்றனர். வேறு சிலரோ வரையறை அற்ற மகாசமுத்திரமாக நோக்குகிறார்கள். விஞ்ஞானியோ மூளையின் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிறான். மெய்ஞ்ஞானிகள் சிலர் அதன் சக்திக்கு வேறு உருவர் கொடுத்து அவதாரமாகம் தம்மை இனம் காட்டியுள்ளனர்.

மனிதன் தனது மூளையின் ஆற்றலை இன்னதென்று அறியாமால் இன்னும் அலைகிறான்.

மனிதனும் தோன்றினான் ஏனைய உயிரினங்களும் தோன்றின. மனிதன் முன்பு இருந்த நிலை என்ன? இன்று இருக்கும் நிலை என்ன? மனிதன் இன்று சந்திர மண்டலத்திலேயே கால் வைத்துள்ளான். ஆனால் ஏனைய மிருகங்களோ உயிரினங்களோ அன்று இருந்த நிலையிலேயே இன்றும் உள்ளன.

கிடைத்தற்கரிய மூளையைப் பெற்றதாலேயே மனிதன் இவ்வளவு முன்னேறியிருக்கிறான். மனிதருக்குள்ளேயே சிலர் எதையும் பகுத்தறிந்து பாராது, எதையும் ஏன் எவ்வாறு, எப்படி என்று ஆராயாது ஒரு குறுகிய வட்டத்துக்குள் முன்னேற்றம் காணாது இருக்கின்றனர்.

மனிதன் [illegible] தான் முன்னேறினான் [illegible] ஒரு அடிப்படை [illegible]

மிருக உணர்ச்சி காரணமாக ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஆட்டிப் படைப்பதாலும், தனது அதிகாரத்தால் மற்றவனை அடிமைப் படுத்துவதாலும் மனித ஆற்றலின் மூல காரணியான அறிவு முறையாக வளர முடியாமல இருக்கிறது

### அறிவு வளர வேண்டும்

மனிதன் தன்னைத் தானே அறியவோ, பிரபஞ்சத்தில் நடப்பனவற்றை அறியவோ, யதார்த்தத்தை உணரவோ, கடந்த காலம் நிகழ் காலம்

**சி. அருணகிரிநாதன்**

எதிர்காலம் என்பவற்றை அறியவோ பகுத்தறிவு வளர்ச்சி வேண்டும்.

மனிதன் தான் எங்கு உள்ளான், தனக்கு யாது நடக்கும், தனது காலத்தினுள் என்ன செய்ய வேண்டும், தான் எதைச் செய்து விட்டுச் செல்ல வேண்டும். —இத்தகைய சிந்தனையை வளர்க்கும் அறிவைப் பெறவேண்டும்.

மனிதன் தனக்குத் தேவையான அறிவைப் பெற்றால் அவன் மேலும் சிந்திக்கவோ, சிந்தனையைப் பகுக்கவோ முடியும்.

அப்பொழுது அவன் பகுத்த முடிவு நன்மையோ தீமையோ என அறிந்து தனது வாழ்வை ஒளிமயமாக்க முடியும்.

எனவே மூளையின் உணர்வுகளை, உணர்வின் அசைவுகளை, அசைவின் அலைகளை அறிவதற்கு அறிவே முதல் தேவைப்படுகிறது. அறிவைப் பெறுவதும் சக்தியைத் தருவதும் மூளை என்னும் இயந்திரமே ஆகும்.

### மூளையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்

மூளையை விஞ்ஞானிகள் முற்பாகம், பிற்பாகம் என்றும் மேல்மனம், அடிமனம் என்றும் பல்வாறாகப் பிரித்துக் கூறுகிறார்கள்.

மூளை கடலைப் போன்றது. அதில் 10 சதவீதத்தைத் தான் மனிதர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று இந்திய மருத்துவ மேதை டாக்டர் ராமமூர்த்தி கூறுகின்றார்.

மனிதர் மூளையின் முன்பாகத்தை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை எனவும் அவர் கூறியிருக்கிறார்.

மனோதத்துவ இயலாளர்கள், மனிதர் மேல் மனதைத் தான் பயன்படுத்துவதாகவும் பேராற்றல் படைத்த அடிமனதைப் பயன்படுத்துவது குறைவு என்றும் கூறுகிறார்கள்

ஐம்புலனை அடக்கி மனதை ஒருமுகப்படுத்தும் போது அடிமனம் செயற்படுவதாகவும், அடிமனம் செயற்படும் போது அது பேராற்றலைத் தருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

டாக்டர் ராமமூர்த்தி மூளையின் முன்பகுதியைப் பயன்படுத்துவதாக இருந்தால் எமது யோகிகளின் முறையைப் பின்பற்றி இடைவிடாத பயிற்சி பெறவேண்டும் என்று கூறுகிறார்.

### மனதை ஒருமுகப்படுத்தும் வழிகள்

மூளையின் ஆற்றலைப் பெருக்குவதற்கு தியானம் அல்லது மனதை வேறு திசைகளில் செல்லவிடாமல ஒருமுகப்படுத்துதல் அவசியமாகிறது. புலன் உணர்வை அடக்குவது என்பது இலேசான காரியம் அன்று. புலன் அடக்குவது ஒரு நாளிலோ அல்லது இரு நாளிலோ செய்யக்கூடிய பணி அன்று. மெதுவாக ஆனால் உறுதியாகத் தொடங்கி நேரத்தைக் கூட்டிக்கூட்டி சென்று மனதை அலையவிடாது தியானித்தல் அல்லது ஒருமுகப்படுத்துதல் வேண்டும்.

தியானம் அல்லது மனத்தை ஒருமுகப்படுத்துதல் ஆஸ்திகனுக்கு மட்டும் உரித்தானதன்று. ஆஸ்திகனோ நாஸ்திகனோ வெவ்வேறு பாதையால் மனதை ஒருமுகப்படுத்தலாம், அல்லது தியானிக்கலாம். ஆஸ்திகன் தான் வணங்கும் கடவுளின் உருவத்தையோ அல்லது தான் வணங்கும் தெய்வாம்சம் பொருந்திய புருடரையோ (சாயிபாவா, யோகர் சுவாமி போன்றோரை) மனதில் நிறுத்தித் தியானிக்கலாம்.

வள்ளலார் இராமலிங்க அடிகளார் சுடரொளியைக் கண்ணால் பார்த்து மனத்தை ஒருமுகப்படுத்துவாராம். நாத்திகன் சூரியனையோ சந்திரனையோ அல்லது சுவரில் ஒரு கரும்புள்ளியொன்றை வரைந்து அப்புள்ளியை இமை கொட்டாமல் கண்ணால் பார்த்து மனதை ஒருமுகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ விடுதிகள் இனி அலரி மாளிகைக்குள் இரா!

கொழும்பு, ஜன. 29

அலரி மாளிகைக்குள் இனி இராணுவத்தினர் தங்கும் விடுதிகள் எதுவும் இருக்கமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் இருந்து அண்மையில் வெடிமருந்து மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட உயர் இராணுவ விசாரணைகளில் அங்கு இடம்பெறும் சோதனை நடவடிக்கைகள் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே புதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி அன்னரத்தினம் பொன்னுத்துரை
(இளைப்பாறிய தலைமை ஆசிரியை, வரணி)

வரணி இடைக்குறுச்சியைச் சேர்ந்த திரு. D. J. பொன்னுத்துரை அவர்களின் மனைவி திருமதி மேரி அன்னரத்தினம் பொன்னுத்துரை அவர்கள் காலமாகி விட்டார்.

இவர் திரு. ஜோஜ் பாலேந்திரன் (C T. B.), யுணிபிறேட் விமலேந்திரன், அருள். திரு. P. R. அனுகூலன் (கிளிநொச்சி தென் இந்திய திருச்சபை), லலிதா, வதனா ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள். திரு. இ. என். லோறன்ஸ் (சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை), திரு நவரட்ணம், திருமதி செல்வநாயகி (ஆசிரியை), றோகினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வரணி தென் இந்திய திருச்சபை சேமக்காலையில் இன்று (29-01-95) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. D. J. பொன்னுத்துரை.
(கணவர்)
இளைப்பாறிய தலைமை ஆசிரியர்.

இந்திரா லொட்ஜ்,
வரணி. [8216]

### கணேசபிள்ளை சிவசங்கர்
(தவில் வித்துவான்)

நாச்சிமார் கோவிலடி"யை பிறப்பிடமாகக் கொண்ட கணேசபிள்ளை சிவசங்கர் 25-01-95 அன்று இந்தியாவில் சிவபதமடைந்தார்.

இவர் கணேசபிள்ளை (தவில் வித்துவான்) - காலஞ்சென்ற நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், சசியின் அன்புக் கணவரும், றெட்னாகிரி, கரிகரசுரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், K. சிவதாஸ் (நாதஸ்வரம் - நாச்சிமார் கோவிலடி), K சிவகுமார் (தவில் வித்துவான்), V. இராஜநாதன், சிவனேஸ்வரி (கனடா), P. சேகர் சிவரஞ்சனி (கொழும்பு), P. கண்ணன் சிவநந்தினி (கனடா), K. சிவராம் (தவில் வித்துவான், கொழும்பு), K சிவகாந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
K. சிவதாஸ்
K. சிவகுமார்
(சகோதரர்கள்)

நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம் (34908)

### கதிரேசக் குருக்கள் கணேசக் குருக்கள்
(அராலி தெற்கு)

காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ கதிரேசக் குருக்கள் அவர்களின் மகன் கணேசக் குருக்கள் நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் லலிதாம்பாளின் அன்புக் கணவரும், நீலவேணி, ஜசிந்தா, நந்தறாஜ், கணேசவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [29-1-95] ஞாயிறு காலை 11 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவசுப்பிரமணிய சர்மா

மாதாங் கோவிலடி,
அராலி தெற்கு [34912]

### K. P. அருளானந்தம்
(அருள்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் K P. அருளானந்தம் நேற்று சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற கோப்பாய் பொன்னம்பலம் பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இணுவில் மேற்கு சின்னத்துரை கண்மணிநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயலக்சுமிதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தலக்சுமி (உதவி நூலகர், யாழ் பல்கலைக்கழகம்), குபேரானந்த உதயன் (உத்தமன், கமக்களஞ்சியம்-மருதனார்மடம்), ஸ்ரீகாந்தரூபி (நுண்கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்), ஆனந்தலக்சுமி (இராமநாதன் கல்லூரி), ஆனந்தவதனி (இந்து மகளிர் கல்லூரி-யாழ்), குகதாஸ் (இந்துக் கல்லூரி, யாழ்.), முகுந்தன் (மத்திய கல்லூரி, இணுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னபூரணம், சின்னத்தங்கச்சி, சரஸ்வதி, சுப்பிரமணியம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீகாந்தராசா (செட்டியார்), ஸ்ரீகரராசா, பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீகாந்தகுமாரி, துரைராசா, சத்தியவான், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இணுவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்திலிருந்து 2 மணியளவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குபேரானந்தஉதயன்
(மகன்)
(உத்தமன், கமக்களஞ்சியம்)

இணுவில் மேற்கு,
மருதனார்மடம். (34914)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஆலயங்களில்

சாவகச்சேரி மட்டுவில் புனித ஊர்து அன்னை திருவிழா 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பணியுடன் நிறைவடையும். [க]

★ ★ ★

கரந்தன் சைவ மகாசபையின் மாதாந்த நிகழ்ச்சியாக மேற்படி சபையின் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுகிழமை திரு. த. சிவகுமாரன் ''உத்தவ கீதை'' என்னும்பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் புனித ஊர்து அன்னை திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 4ஆம் திகதிவரை நடைபெறும். (ஐ)

## எழுத்தாளர் ஒன்றியத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 29

லண்டனில் வெளியாகும் 'நாழிகை' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. மகாலிங்க சிவத்துடனான [மாலி] கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைப் பேரரசு ஏ. ரி பொன்னுத்துரை தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும். (ஐ)

## யோகாசன விழா

யாழ்ப்பாணம், ஜன. 29

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தால் நடத்தப்படும் விசேட யோகாசன செய்முறை அரங்கேற்ற விழா இன்று நடைபெறுகிறது,

நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு திரு க. கேசவன் தலைமையில் இவ்விழா ஆரம்பமாகிறது. வைத்திய கலாநிதி த. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (அ)

## இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 29

மானிப்பாய் பரிஷ் லயன் கடிகத்தின் ஆதரவில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 22 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

நேற்று முன் தினம் 180 பேரில் மேற் கொள்ளப்பட்ட பூர்வாங்கப் பரிசோதனைகளில் இருந்து இந்த 22 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். [க-5]

## பேராற்றலின் ..

( 5ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுத்துகிறான்.

பாதைகள் வேறாயினும் பயிலுனனின் நோக்கம் புலன் உணர்வை அடக்கி மனதை ஒருமுகப்படுத்துவதே யாகும். எமது யோகிகளோ, சித்தர்களோ புத்தரோ இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் யாவரும் தியானத்தின் மூலமே தமது மூளையின் ஆற்றலை பெருக்கியிருப்பதாகத் தெரிகிறது. டாக்டர் ராமமூர்த்தி தியானத்தின் போது மூளை அணுக்களின் பலம் கூடுவதாகவும் 100 கோடிக்கும் மேற்பட்ட அணுக்கள் நமது மூளையில் உள்ளன என்றும் தினமும் 15 நிமிடங்களாவது தியானம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியிருக்கிறார்.

தியானம் அல்லது மனதை ஒருமுகப்படுத்துவது மூலம், அதாவது இடைவிடாத பயிற்சி மூலம், எமது மூளையின் ஆற்றலைப் பெருக்கலாம்.

மனிதன் சூழ்நிலைக்கும் இடத்திற்கும் காலத்துக்கும் ஏற்பத் தனது மூளையின் ஆற்றலைப் பெருக்கி மன மகிழ்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைய முடியும். ★

## புடையன் பாம்புகளை கோரும் கொழும்பு பெரியாஸ்பத்திரி

கொழும்பு, ஜன. 29

பாம்பினால் கடியுண்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்கு, புதிய விஷத் தடை மருந்தை உற்பத்தி செய்வதற்கு 20 உயிருள்ள புடையன் பாம்புகளைத் தந்துதவுமாறு கொழும்பு பெரியாஸ்பத்திரி பொதுமக்களைக் கோரி உள்ளது.

இலங்கையில் பாம்புக் கடிச் சிகிச்சைக்குத் தேவையான மருந்தை தயாரிப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள 'புடையன் பாம்புகள்' தேவை என்று கொழும்பு பெரியாஸ்பத்திரியை சேர்ந்த டாக்டர் அரியராணி அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நச்சுப் பாம்புகளின் கடிக்கு சிகிச்சை செய்ய கொழும்புப் பல்கலைக் கழகமும்— ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகமும் — கூட்டாகப் பரிசோதனைகளை நடத்தி வருகின்றன.

தற்போது இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் பாம்புக்கடி விஷத்தடை மருந்து (ANTIVENOM) இலங்கைக்குப் பொருத்தமானது அல்ல, ஏனென்றால் அது இந்திய நிலைமைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட மருந்தாகும் என்றும் டாக்டர் அரியராணி அரியரத்தினம் கூறினார்.

பாம்புகளை நேரடியாகக் கொண்டுவர முடியாதவர்கள் கொழும்பு பெரியாஸ்பத்திரியுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பாம்பு கடியால் இறப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஒரு இலட்சம் பேரில் 6 பேர் பாம்புகடியால் மரணம் அடைகிறார்கள்

இந்தியாவிலிருந்து தற்போது தருவிக்கப்படும் பாம்புக்கடி விசத்தடை மருந்து போதிய பலன் அளிக்கத் தவறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே இலங்கையில் உள்ள பாம்புகள் மூலம் இந்த மருந்தைத் தயாரிக்க தற்போது ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-3)

## சமாதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திக் கொண்டிருக்கிறோம். நடைபெறுகின்ற முயற்சிகள் குறித்து அவர்களின் கருத்தையும் நாம் அறிந்து கொண்டுதான் இருக்கிறோம்.

கேள்வி:- அரசியல் தீர்வைப் பொறுத்த வரை சமஷ்டித் தீர்வை அல்லது முழு அளவிலான பிரதேச சுயாட்சியை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக திரு. வே. பிரபாகரனும், திரு. பாலசிங்கமும் கூறியுள்ளபோதிலும்—

தனி ஈழக் கோரிக்கையை கைவிட்டு விரிவான அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பேச்சு நடத்துவதில் அவர்கள் இதய சுத்தியுடன் — அக்கறையாக இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கும் அறிகுறிகள் உங்களுக்குத் தென்பட்டிருக்கிறதா?

சந்திரிகா:- உங்களுக்கு நான் விவரங்களைத் தர முடியாது. இது விடயத்தில் நிலைமை நம்பிக்கை தருவதாக இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சொல்லத் தான் வேண்டும்.

### ராஜீவ் கொலை

கேள்வி:- ராஜீவ் காந்தி கொலையில் புலிகளின் பங்கு குறித்து பெருமளவில் விசனம் உள்ளது. பெருமளவு சாட்சியங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்று வழக்கு விசாரணையில் தீர்ப்பு அளிக்கப்பட்டால் அது உங்களை ஒரு அசௌகரியமான நிலைக்கு தள்ளக்கூடும் பிரபாகரனை நாடுகடத்துமாறும், நீதியின் முன் நிறுத்துமாறும் இந்தியா கேட்கக்கூடும். சமாதானத்தை காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் உங்களுக்கு இதனால் ஒரு திரிசங்கு நிலை உருவாகாதா?

சந்திரிகா:- நாம் இன்னும் பிரபாகரனை சந்திக்கவில்லை அவரை நாடு கடத்துவதானால் முதலில் அவரைப் பிடிக்கவேண்டுமே.

ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டும் இந்திய இராணுவத்தினால் பிரபாகரனைப் பிடிக்க முடியவில்லையே. [இ-ஈ]

## புலிகளின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்துள்ளது. போக்கு வரத்துக்கு உதவுமாறும் வேறு சில உதவிகளைத் தருமாறும் கேட்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலை மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலாகிய பின்னரே ஏற்பட்டுள்ளது. இது ஒப்பந்த விதிகளுக்கு முரணானது'

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காக காலத்துக்குக் காலம் பாதுகாப்பு இணைப்பதிகாரியின் அலுவலகத்தால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பேணுவதுடன் [illegible] புலிகளால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை பேணாது விலகி இருக்குமாறும் வேண்டுகோள் [illegible]

சுற்று நிருபத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (க)

## கம்பன் கழகம் வழங்கும் மகர யாழ். விருதுக்கு ரூ.1லட்சம் பணமுடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

அகில இலங்கைக் கம்பன் கழகம் வருடாந்தம் வழங்கும் உயர் விருதான, மகர யாழ் விருதுக்குரிய பண முடிப்பு இம்முறை ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்வோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் தொண்டாற்றி இளைய தலைமுறைக்கு முன் -னுதாரணமாக வாழும் ஒருவருக்கு கம்பன் கழகம் இந்த விருதை வழங்குகிறது.

1993, 1994ஆம் ஆண்டுகளில் மகர யாழ் விருதுக்கு 25,000 ரூபாவே வழங்கப்பட்டது. இம்முறை அத்தொகை ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

விருது ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் இவ்வளவு பெருந்தொகை வழங்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

பொது மக்கள் சிபார்சு செய்யும் சான்றோர்களில் இருந்தே விருதுக்குரியவர் தெரிவு செய்யப்படுவர்.

பொது மக்கள் தமது சிபார்சுகளை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கம்பன் கழகத்துக்கு அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் சிபார்சுகள் இம்முறை மிகப் பெரும் எண்ணிக்கையில் கிடைக்கும் என்று கழக வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (அ)

## விளையாட்டு நிகழ்வுகள்

கைதடி மேற்கு உதய நகர் கிராமத்தில் வட்டவை ரீதியாக நடைபெறும் கிராமிய பாசறை நிகழ்வின் மூன்றாம் நாளான இன்று விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

★ பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள தாச்சிப் போட்டியில் கைதடி வளர்மதி வி. க.அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி வி. கழகமும் —

★ பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் கரப்பந்தாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மட்டுவில் கலைவாணி அணியும்—

★ பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் உதைபந்தாட்டத்தில் நுணாவில் தேவகி அணியை எதிர்த்து கைதடி ஐக்கிய வி. க அணியும் மோதவுள்ளன. [ஐ]

★ ★ ★

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் விக்ரம் ராஜன் ஞாபகார்த்தமாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிறு காலை 8. 30 மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் வி. க அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.

பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு இ. மகேந்திரனும் —

சிறப்பு விருந்தினராக கொக்குவில் ஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு. க. பழனிவேற்பிள்ளையும் கலந்து கொள்வர். [ஐ]

## துன்னாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

இவருக்காக வாதாடுவதற்கு சட்டத்தரணி ஆர் கே டபிள்யூ குணசேகராவை ''மேர்ஜ்'' நிறுவனம் அமர்த்தி உள்ளது. (இ)

## அரசு போர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள் என்று கூறப்படுவதை நான் நிராகரிக்கிறேன். அவ்வாறான அச்சம் எதுவும் எமக்கு இல்லை.

இராணுவத்தில் உள்ள பெரும் பான்மையானவர்கள் போருக்கு முடிவு கட்டவே விரும்புகிறார்கள்.

தற்போது இராணுவத்தினர் அரசின் சமாதான முயற்சிகளுக்கு மிகுந்த ஒத்துழைப்புத் தந்து செயற்படுகிறார்கள்.

சமஷ்டி அரசியல் தீர்வை புலிகள் ஏற்றுக்கொண்டிருப்பது எனக்கு உற்சாகத்தை தருகிறது.

இவ்வாறு ஜனாதிபதி தமது பேட்டியில் தெரிவித்தார். (இ)

(இப்பேட்டியின் சில பகுதிகள் நேற்றைய உதயனின் தலைப்புச் செய்தியில் இடம் பெற்றிருந்தன.)

## அரசு – புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயற்பாடுகள் குறித்தும் —

அமைச்சர் கதிர்காமர் கிளின்ரன் நிர்வாகத்துக்கு விவரமாக எடுத்து விளக்குவார்.

இதேவேளை —

சந்திரிகா அரசின் சமாதான முயற்சிகளை அமெரிக்காவின் கிளின்ரன் நிர்வாகம் வரவேற்றுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் நிர்வாகமும், அமெரிக்க காங்கிரஸும் வரவேற்றுள்ளன.

விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அரசியல் தீர்வு ஒன்றைக் காண முன்வர வேண்டும் என்றும் கிளின்ரன் நிர்வாகம் விருப்பம் தெரிவித்திருப்பதாக அரச சார்பு ''டெய்லி நியூஸ்'' 'தினகரன்' பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

அமைச்சர் கதிர்காமர், அமெரிக்க நிர்வாகத்துடன் இரணவில ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' நிலைய விவகாரம் —

ஸ்ரீலங்காவில் தயாரிக்கப்படும் தைக்கப்பட்ட ஆடைகளை அமெரிக்கா கூடுதலாக வாங்குவதற்காக, கோட்டாவை அதிகரித்தல் — என்பன சம்பந்தமாகவும் பேச்சுக்கள் நடத்துவார். [அ-ஒ-ஐ]


### யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
பழைய மாணவர் சங்கம்

பாடசாலை மேம்பாட்டு நிதிக்காக 31-01-95 காலை 10-30 மணியளவில் நடத்த இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் அன்று நடைபெறாது என்பதையும் 28-02-95 காலை 10-30 மணிக்கு நடத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்/திருக்குடும்பக் கன்னியர் மடம்
[சி-451]

### வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:- 29 - 1 - 95 ஞாயிறு பி. பகல் 3.00 மணி (இன்று)
இடம்:- ஆலய மண்டபம்
தலைவர்:- என். இராஜதேவன் [தலைவர், பரிபாலன சபை]

அனைத்து பொதுச்சபை அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் கொடுக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

வீ. எஸ். இரத்தினசபாபதி
செயலாளர்
பரிபாலன சபை,
வ. ஸ்ரீ. வீ அ. ஆலயம். [34911]

### திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சன சமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழா

இடம்: நிலைய முன்றில்
காலம்: 29.01.95 ஞாயிறு மாலை 7 மணி

நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல்
திரு. சி, தனபாலசிங்கம் [உரிமையாளர் சுகந்தினி வி. க.]
திரு, த. விவேகானந்தன் [உரிமையாளர் விவேகானந்தா ஸ்ரோர்ஸ்]
திரு. சி. வரதராஜன் [உரிமையாளர் தர்சினி அழகுசாதன மாடம்,யாழ்.]

வரவேற்புரை-
செல்வி. சு. பேபிசுலோசனா

தலைமையுரை-
இரா. மதியழகன் [தலைவர் வாலை அம்மன் வி. க.]

பிரதம விருந்தினர்-
திரு. திருமதி. சிவலிங்கராஜா [எம்.ஏ] [சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்]

சிறப்பு விருந்தினர்கள்:-
திரு. எஸ். ரஜீவன் [உதவி முகாமையாளர் வர்த்தக வங்கி, யாழ் ]
திரு. பொ. வைரமுத்து [நிர்வாக உத்தியோகஸ்தர், நல்லூர் பிரதேசசபை]
செல்வி. ரதி [அரசியல்துறைப் பொறுப்பாளர் மகளிர் பிரிவு]
திரு. திருக்குமரன் [அரசியல்துறைப் பொறுப்பாளர் வலிகாமக் கோட்டம்]
திரு ந. சத்தியரூபன் [சிறி நதியா நகை மாடம் யாழ்.]

நன்றியுரை:-
திரு. க. சிவகந்தரூபன் [நிலையத் தலைவர்]

பரிசில்கள் வழங்கல்:-

''சிறப்புக் கலை நிகழ்ச்சிகள்''

★ அனைவரும் வருக ★

– நிர்வாகத்தினர் –

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
ராஜ் எரிபொருள் விற்பனை நிலையம்
திருநெல்வேலி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org